வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | Reg. No. : P. 1632 | விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 22.05.2025 வியாழக்கிழமை | இதழ் : 143 | பக்கங்கள் : 12




# வடக்கு-கிழக்கு எம்.பிக்களுடன் பிரதமர் நாளை முக்கிய பேச்சு!

## காணிப் பிரச்னை குறித்து ஆராயப்படும்

கொழும்பு, மே 22

**வடக்கு மாகாணத்திலுள்ள காணிகள் தொடர்பில் கடந்த மார்ச் மாதம் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் குறித்து எழுந்திருக்கும் பிணக்குகள் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.**

காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 28.03.2025 திகதியிடப்பட்டு, 2430 இலக்கமிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலில் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அதனை உடனடியாக வாபஸ் பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து அந்த வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்துவதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அரசு அறிவித்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 11



## மக்கள் மீண்டும் இன ரீதியாக பிளவுபட இடமளிக்கவேண்டாம்

### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் கனேடிய தூதுவரிடம் வேண்டுகோள்

கொழும்பு, மே 22

மக்களை மீண்டும் இன ரீதியாகப் பிளவுபடுத்தும் எந்தவொரு செயற்பாடுகளுக்கும் இடமளிக்க வேண்டாம் என கனேடிய தூதுவரிடம் வேண்டுகோள் விடுத்தார் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்.


கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் மற்றும் இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வோல்ஷ் ஆகியோருக்கிடையே நேற்று புதன்கிழமை 11

## இனப்படுகொலை நினைவுத்தூபி காலப் பெறுமதி கொண்ட செயல்!

### கனேடியத் தூதுவரிடம் சிறீதரன் எம்.பி.

கொழும்பு, மே 22

கனடாவின் பிரம்டன் நகரில் இனப்படுகொலை நினைவுத்தூபி அமைக்கப்பட்டமை காலப்பெறுமதி மிக்க செயல் என்றும், அதற்கு ஈழத்தமிழர்கள் சார்பில் கனேடிய அரசுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸிடம் கடிதம் ஒன்றையும் கையளித்துள்ளார். 11



## வடக்கில் காலை 8.30 மணி வேலைக்கு 9 மணிக்கு வரும் அரச பணியாளர்கள்!

### திணைக்களத் தலைவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்கிறார் ஆளுநர்

யாழ்ப்பாணம், மே 22

பல திணைக்களங்களுக்கு அலுவலர்கள் காலை 9 மணிக்குத்தான் வருகின்றார்கள். காலை 8.30 மணிக்கு முன்னர் அலுவலகம் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. திணைக்களத் தலைவர்கள், அலுவலர்களின் ஒழுக்கம் - கட்டுப்பாடு தொடர்பில் கவனம் 11



## தமிழ் இன அழிப்பு கருத்து பகிர்வு தொடர்ந்தால் சட்ட நடவடிக்கை

### அரசாங்கம் எச்சரிக்கை!



கொழும்பு, மே. 22

இலங்கையில் தமிழ் இன அழிப்பு இடம் பெற்றதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கனடாவில் 11

## பூவரசங்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது!

வவுனியா, மே 22

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐந்து இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற முற்பட்டபோது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் நேற்று கைது செய்யப்பட்டார்.

இந்தக் கைது நடவடிக்கை நேற்று மாலை இடம்பெற்றது

பூவரசங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இலஞ்சம் கோருவதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து நேற்று பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு சென்ற இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் 11

## யாழ்ப்பாணத்தில் திடீரென மயங்கிய இளைஞன் மரணம்!

யாழ்ப்பாணம், மே. 22

யாழில் திடீரென உடல் சுகவீனம் ஏற்பட்ட இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். தேவாலய வீதி, சங்கானை பகுதியைச் சேர்ந்த பரமானந்தம் கோவிந் (வயது 26) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று முன் தினம் இரவு உணவருந்திவிட்டு தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தார். இதன் போது திடீரென நெஞ்சுவலி ஏற்பட்ட நிலையில் வீட்டிலேயே மயக்கமடைந்துள்ளார்.

இந்நிலையில் அவரை சங்கானை பிரதேச 11

## முல்லைத்தீவில் பட்டா மோதி 9 வயது மாணவி உயிரிழப்பு!



முல்லைத்தீவு, மே. 22

முல்லைத்தீவு, கருநாட்டுக்கேணி பகுதியில் நேற்று புதன்கிழமை இடம் பெற்ற வாகன விபத்தில் 9 வயது பாடசாலை மாணவி ஒருவர் உயிரிந்துள்ளார்.

பேக்கரி உற்பத்திப் பொருட்களை விற்பனை செய் யும் நடமாடும் ஒட்டோவில் பணிஸ் வாங்க சென்ற சந்தர்ப்பத்தில் பட்டா மோதி குறித்த சிறுமி விபத்துக்கு 11

## முள்ளிவாய்க்கால் நினைவு; பிரிட்டிஷ் பிரதமருக்கு மனு!

லண்டன், மே 22

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 16 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, பிரித்தானிய பிரதமர் கீர் ஸ்டார்மருக்கு, தமிழ் இனப்படுகொலையை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கக் கோரியும், ஏனைய யுத்த குற்றவாளிகள் மீதும் தடையை விதிக்கவும், நீதியை நிலைநிறுத்த நடவடிக்கைகள் எடுக்கவும வலியுறுத்தி மனுவொன்று நேற்று கையளிக்கப்பட்டது.

இந்த மனுவை சமர்ப்பிக்கும் செயற்பாடனது, இனப்படுகொலை தடுப்பு மற்றும் தண்டிப்புக்கான 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். அரசாங்க அதிபருடன் உலக வங்கிக் குழு சந்திப்பு

யாழ்ப்பாணம், மே. 22

உலக வங்கிக் குழுவினர் யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை நேற்று பிற்பகல் 03.00 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் பதில் அரசாங்க அதிபரால் பிரதானமாக பின்வரும் விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

1. விவசாயம், மீன்பிடி மற்றும் கைத்தொழில் போன்ற துறைகளின் தற்போதைய நிலவரங்கள், வாழ்வாதாரத் துறைகளுக்கான தேவைப்பாடுகள், உள்ளூர் உற்பத்திகளுக்கான ஏற்றுமதிச் சந்தை வாய்ப்புக்கள் தொடர்பாக விளக்கமளித்தார்.

2. யாழ்ப்பாண மாவட்டத்துக்கான சுற்றுலாத் துறை அபிவிருத்தி தொடர்பில் விசேடமாக யாழ்.கோட்டை மற்றும் பழைய கச்சேரியை புனரமைத்து மரபுரிமை சுற்றுலா அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான அவசியத்தையும் எடுத்துக் கூறினார்.

3. பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான நிலையான வாழ்வாதார அபிவிருத்தி தொடர்பான கோரிக்கைகளும் பதில் அரசாங்க அதிபரால் முன் வைக்கப்பட்டது.

4. காங்கேசன்துறையில் 351 ஏக்கரில் கைத்தொழில் வலயமாக பிரேரிக்கப்பட்ட பகுதியில் எதிர்கால முதலீடு மற்றும் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் அபிவிருத்தி, அதற்கான தொழில் வாய்ப்புக்களுக்கான தேவைப்பாடுகள் தொடர்பாகவும் விளக்கப்பட்டன.



5. தனியார் துறைகளின் அபிவிருத்தி மூலம் இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்புக்களை வழங்கமுடியும் எனவும், அதற்கான தனியார் துறைகளின் முதலீடுகளுக்கான தேவைப்பாடுகள் மற்றும் வசதி வாய்ப்புகள் தொடர்பாகவும் பதில் அரசாங்க அதிபரால் விளக்கமளிக்கப்பட்டது.

6. பலாலி சர்வதேச விமான நிலையத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்தவேண்டிய தேவைப்பாடுகள் மற்றும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தியின் அவசியம் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலைத் தொடர்ந்து பதில் அரசாங்க அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக பழைய கச்சேரியை குழுவினர் பார்வையிட்டனர்.

இக் கலந்துரையாடலில் உலக வங்கி குழுவின் வதிவிடப் பிரதிநிதி விக்டர் அந்தோனிப்பிள்ளை, மாலைதீவு மற்றும் இலங்கைக்கான வதிவிட முகாமைத்துவப் பிரிவின் சிரேஷ்ட செயற்பாட்டு அலுவலர் ஸ்ரீபன் மசீங், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு அலுவலர் திருமதி ருக்சினா குணரட்ன மற்றும் இணைந்த செயற்பாட்டு அலுவலர் மொகமட் கவீஸ் சைநூடீன் ஆகியோர் பங்குபற்றினார்கள்.

(அ-05)

# 764, 769 வழி பஸ் சேவையில் எந்தவித மாற்றமும் இல்லை

## வடக்கு ஆளுநர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே. 22

764 மற்றும் 769 ஆகிய வழித் தடங்களின் பஸ் சேவைகளை காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை எடுக்கப்பட்ட தீர்மானத்தில் எந்தவொரு மாற்றமும் இல்லை என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானத்துக்கு அமைவாக பஸ் சேவையை ஒழுங்குபடுத்தி கண்காணிப்பதாக யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆளுநர் செயலகக் கூட்டத்தில் உறுதியளித்திருந்த நிலையில் அதனைச் செயற்படுத்துமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு தொலைபேசியூடாக ஆளுநர் அறிவுறுத்தினார்.

(அ-05)

# ஜனாதிபதியை சந்திக்கக் கோரி குழப்பம் விளைவித்த நபர் கைது!

கொழும்பு, மே. 22

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்திக்க வேண்டுமெனக் கூறி குழப்பம் விளைவித்த நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

போர்வீரர் நினைவு நிகழ்வில் பங்கேற்கச் சென்றிருந்த ஜனாதிபதியை சந்திக்க வேண்டுமென குறித்த நபர் கோரியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நபருடன் இருந்த இரண்டு பிள்ளைகளை பாதுகாப்பு கருதி பொலிஸார் பொறுப்பில் வைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தலங்கம பொலிஸார் குறித்த நபரை கைது செய்துள்ளனர். சந்தேக நபர் பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கடித்துள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

காணிப் பிரச்னை தொடர்பில் 65 முறைப்பாடுகள் செய்துள்ளதாகவும் வெலிபன்ன பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் குறித்த நபர் கூறியுள்ளார்.

பொலிஸாரினால் தமக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து ஜனாதிபதிக்கு நேரடியாக முறைப்பாடு செய்ய தாம் முயற்சித்ததாகத் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியை சந்திக்க இடமளிக்காவிட்டால் வீதியில் செல்லும் வாகனங்களில் பிள்ளைகளுடன் மோதுண்டு உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# பொதுஜன பெரமுன மீது குற்றம் சாட்டவேண்டாம்!

## ஷாந்த பண்டார கோரிக்கை

கொழும்பு, மே. 21

பொதுஜன பெரமுனவின் மீது அடிப்படைத்தன்மையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஷாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுன கட்சி என்ற வகையில் எந்த பாதாளக் குழுக்களுடனோ, பாதாளக்குழு தலைவர்களுடனோ போதைப்பொருள் கடத்தல் காரர்களுடனோ இணைந்து செயற்பட்டதில்லை.

ஆகவே எம்முடைய கட்சியின் மீது சுமத்தப்பட்டுள்ள இந்த குற்றச்சாட்டை நாம் கடுமையாக கண்டிக்கின்றோம். பொதுஜன பெரமுனவினருடன் உறுப்பினர்களுக்கு அத்தகைய தொடர்பு காணப்படும் பட்சத்



தில் அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கை களை மேற்கொள்ளும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது.

எனவே கட்சிகளை குற்றம் சாட்டவேண்டாம். கட்சிகளில் யாரேனும் ஒருவர் குற்றச்சாட்டுகளை முன்வைத்தால், அதை விசாரிக்கவும். ஆனால் நாம் அறிந்திருப்பது என்னவென்றால், சில குழுக்கள் இதைவிட மோசமான முறையில் செயல்படுகின்றன, இந்த நாட்டில் கொலைகளை நடத்துகின்றன மற்றும் சில நபர்களை பகிரங்கமாக அச்சுறுத்துகின்றன - என்றார்.

(அ)

# நெல்லியடியில் அதிகாலை கடை ஒன்று தீப்பிடித்தது!

## 20 இலட்சம் ரூபாவுக்கு மேல் நட்டம்

யாழ்ப்பாணம், மே. 22

நெல்லியடி நகர்ப்பகுதியில் உள்ள கடை ஒன்றில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டது.

இதன்போது கரவெட்டி பிரதேச சபை ஊழியர்கள் அப்பகுதி வர்த்தகர்கள், பொது மக்களுடன் இணைந்து செயற்பட்டு தீ விபத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த தீ விபத்து காரணமாக சுமார் 20 இலட்சம் பெறுமதியான பொருட்கள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மின்சார கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச சபையின் செயலாளரினால் உடனடியாக யாழ்.மாநகர சபை தீ அணைப்பு பிரிவுக்கு அதிகாலை 4:42 மணிக்கு தகவல் வழங்கி ஸ்தலத்துக்கு தீய





ணைப்புப் படையும் வருகை தந்து தீயை அணைப்பதற்கு உதவியுள்ளது.

தீ அணைப்பின்போது உடனடியாக செயற்பட்ட பிரதேச சபையின் ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக கரவெட்டி பிரதேச சபையின் செயலாளர் கணேசன் ஹம்சநாதன் தெரிவித்துள்ளார்.

(அ-02)

# சர்வதேச புத்தகக் கண்காட்சி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், மே. 22

யாழ்ப்பாணம் சர்வதேச புத்தக கண்காட்சி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை ஆரம்பமானது.

விருந்தினர்கள் மங்கல வாத்தியங்கள் இசைக்க மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டு மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து, பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நாடா வெட்டி கண்காட்சிக் கூடத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். குறைந்த விலையில் புத்தகங்களை வழங்குதல், ஒரே கூரையின் கீழ் அனைத்து புத்தகங்களையும் வழங்குதல், தட்டுப்பாடான புத்தகங்களை வழங்குதல் உள்ளிட்ட நோக்கங்களுக்காக இந்த புத்தக கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இங்கு புத்தகங்களுக்கு சிறப்பு விலைக்கழிவுகளும் வழங்கப்படுகின்றன.

நேற்று ஆரம்பமான இந்த கண்காட்சியானது எதிர்வரும் 25ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் இரவு 9.30 வரை நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த கண்காட்சியில் 30 கடைகள் தங்களிடமுள்ள புத்தகங்களை காட்சிப்படுத்தியுள்ளன.

இந்த கண்காட்சிக்கு டான் தொலைக்காட்சி நிறுவனமானது ஊடக அனுசரணையை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු
22.05.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 08

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## உலக ஜனநாயக சிந்தனை மாற்றமடைகின்றதா?

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் உத்தியோகபூர்வ மொழியாக ஆங்கிலத்தை அறிவித்திருக்கின்றார். அதற்கான நிறைவேற்று உத்தரவில் மார்ச் மாதம் கையெழுத்திட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து, வெள்ளை மாளிகையின் இணையத்தளத்தின் ஸ்பானிஷ் மொழிப் பிரிவு நீக்கப்பட்டது.

அமெரிக்கா, அடிப்படையில் பல்மொழி நாடல்ல, அமெரிக்காவில் குடிபெயர்ந்தவர்கள் பல மொழிகளை பேசினாலும் கூட, அவைகள் உத்தியோகபூர்வ அந்தஸ்துடைய மொழிகள் அல்ல. அடிப்படையில் ஆங்கிலம்தான் அமெரிக்க மொழி. ஆனால், இங்கு விடயம் அமெரிக்கா இதுவரையில் ஜனநாயக பல்வகைமைக்கு தலைமை தாங்கிய நாடு. அமெரிக்காவின் பங்களிப்பின்றி, பல்வகைமையை உலகு தழுவிய விழுமியமாக பாதுகாக்க முடியாது.

ஐரோப்பிய நாடுகள் பல்மொழிக் கொள்கையை கொண்டிருக்கின்றன. கனடா ஆங்கிலம் மற்றும் பிரெஞ்ச் ஆகியவற்றை உத்தியோகபூர்வ மொழிகளாகக் கொண்டிருக்கின்றது. சுவிற்ஸர்லாந்து நான்கு தேசிய மொழிகளை கொண்டிருக்கின்றது. ஆனால் இவ்வாறான நாடுகளால் உலகளாவிய ஜனநாயக விழுமியங்களுக்கான அரசியல் தலைமைத்துவத்தை வழங்க முடியாது. அதற்கான ஆளுமையும் பலமும் அவர்களிடம் இல்லை. அமெரிக்கா ஒன்றினால்தான் அவ்வாறான தலைமைத்துவத்தை வழங்க முடியும். எனவே, அமெரிக்கா அதன் தலைமைத்துவத்திலிருந்து பின்வாங்கினால், உலகளாவிய ஜனநாயக கட்டமைப்புக்கள் பலவீனமடையும். தாராளவாத அமைப்புக்கள் மேலும் பலவீனமடையும்.

அமெரிக்கா ஆங்கில மொழியை உத்தியோகபூர்வ மொழியாக அறிவிக்கும் போது, ஏனைய நாடுகளும் பெரும்பான்மைகளின் மொழியை உத்தியோகபூர்வ மொழியாக முன்வைத்தால், அதனை எவ்வாறு தவறென்று கூற முடியும் என்னும் கேள்வி எழலாம். இலங்கை தொடர்ந்தும் இரண்டு மொழிக் கொள்கையில் உறுதியான நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பதில் ஆர்வமற்ற நாடாகவே இருக்கின்றது.

1956இல் பண்டாரநாயக்க தனிச் சிங்கள மொழிச் சட்டத்தை அமுல்படுத்தினார். அப்போது, அது ஓர் இனவாதக் கொள்கையாகவே நோக்கப்பட்டது. பின்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தமே தமிழ் மொழிக்கான உத்தியோகபூர்வ அந்தஸ்தை பெற்றுக் கொடுத்தது. அதே போன்று, இந்தியாவில் இந்தி மொழியின் மேலாதிக்கம் இருப்பதாகவும் தங்கள் மீது இந்தி மொழி திணிக்கப்படுவதாகவும் தமிழ் நாட்டு திராவிட அரசியல்வாதிகள் தொடர்ந்தும் குற்றம்சாட்டி வருகின்றனர்.

தற்போது, இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சி, இந்தி மொழியின் மேலாதிக்கம் தொடர்பில் கரிசனை கொண்டிருக்கின்றது. அதாவது பொரும்பான்மையின மொழிக்கு முன்னுரிமை கொடுப்பது, உத்தியோகபூர்வ ஆவணங்களை அந்த மொழியில் பேணிக் கொள்வது. இதனை மாநிலங்கள் எதிர்க்கின்றன முக்கியமாக தமிழ் நாடு இந்தி எதிர்ப்பை, ஓர் அரசியலாகவே இப்போதும் முன்வைத்து வருகின்றது.

இங்கு பிரச்னை வேறு. ஈழத் தமிழர்கள் தங்களின் நியாயமான உரிமைகளுக்கான ஆதரவுத் தளத்தை வெளியிலேயே தேடிவருகின்றனர். அதில் நியாயமும் உண்டு. ஏனெனில் சிங்கள ஆட்சியாளர்கள் ஆகக் குறைந்த விடயங்களில் கூட கரிசனை கொள்ளாத போது, தமிழர்கள் வெளியுலகைத்தான் நோக்க முடியும். ஆனால், வெளியுலகில் தற்போது ஏற்பட்டுவரும் மாற்றங்கள் ஈழத் தமிழர்களுக்கான ஆகக் குறைந்த ஆதரவு வெளியையும் சுருக்கிவருகின்றது என்பதுதான் உண்மை. அடிப்படையில் உலகளவில் சடுதியாக மாற்றமடைந்துவரும் விடயங்களால், அரசாங்கம் பல விடயங்களை செய்யாமல் நழுவிக் கொள்வதற்கான வாய்ப்பையே வழங்கிவருகின்றது. இந்த நிலையில் அதிகம் உள்ளுக்குள் சிந்திக்க வேண்டிய நிர்பந்தமே ஈழத் தமிழர்களுக்கு முன்னால் இருக்கின்றது. அதாவது, இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்த வேண்டிய நிலைமையை தவிர, வேறு தெரிவுகள் தமிழர்களுக்கு முன்னால் இல்லை.

## வடக்கு சிறுவர் இல்லங்களில் சிறுவர்களின் வரவு அதிகரிப்பு

### பராமரிப்பில் சவால்கள் உள்ளன என்கிறார் வடமாகாண ஆளுநர்

யாழ்ப்பாணம், மே. 22

“சிறுவர் இல்லங்களை நோக்கி அதிகளவான சிறுவர்கள் கொண்டுவரப்படுகின்றனர். இது எமக்கும், சிறுவர்களை பராமரிக்கும் நிறுவனங்களுக்கும் சவாலாக மாறியுள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - அரியாலையில் அமைந்துள்ள எஸ். ஓ. எஸ். தொழிற்பயிற்சி நிலையத்தில் கற்கைநெறிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கான என்.வி.க்யூ. தரச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சான்றிதழ்களை வழங்கிய பின்னர் ஆளுநர் மேலும் உரையாற்றியதாவது-

சிறுவர் இல்லங்களை நோக்கி அதிகளவான சிறுவர்கள் கொண்டுவரப்படுகின்றனர். காலத்தின் சூழலாக அது மாறியிருக்கின்றது. அது எமக்கும் சிறுவர் களை பராமரிக்கும் நிறுவனங்களுக்கும் சவாலாக உள்ளது.

இந்த நிறுவனம் வழங்கும் தொழிற்பயிற்சி, மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு எந்தளவுக்கு உதவுகிறது என்பதில் தான் அதன் வெற்றி அமைகிறது. என்.வி.க்யூ. தரச் சான்றிதழைப் பயன்படுத்தி மாணவர்கள் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகளைப் பெறலாம். மேலும் கல்வியைத் தொடரவும் முடியும்.

தொழில் தகைமையுடன் படிப்பை முடிக்கும் இவர்கள், எதிர்காலத்தில் தொழில் முனைவர்களாக மாறி மற்றவர்களுக்கும் வேலைவாய்ப்புகளை வழங்கவேண்டும்-என்றார்.

இந்நிகழ்வில், வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் சுஜீவா சிவதாஸ் கௌரவ விருந்தினராகவும், எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராம தேசிய இயக்குநர் திவாகர் ரட்ணதுரை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (அ)

## நீண்ட நாள் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட சந்தேக நபர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், மே. 22

யாழ்ப்பாணத்தில் நீண்ட நாட்களாக சைக்கிள் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது 16 சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன.

குருநகர் பகுதியைச் சேர்ந்த 40 வயது மதிக்கத்தக்க ஒருவரே, யாழ். மாவட்ட குற்ற தடுப்புப் பிரிவு பொலிஸ் பதில் கடமை அதிகாரி பொ.ப.விஜயராஜ குழுவினரால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின்போது சில மாதங்களாக நல்லூர், யாழ் நகரப் பகுதி, கே.கே.எஸ்.வீதி போன்ற இடங்களிலிருந்து திருடப்பட்ட ஆண்கள் பயன்படுத்தும் ஐந்து சைக்கிள்களும் பெண்கள் பயன்படுத்தும் 11 சைக்கிள்களும் என 16 சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபரை யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சைக்கிள்களை தொலைத்த உரிமையாளர்கள் இருப்பின் தகுந்த அடையாளங்களை காண்பித்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவுப் பொலிஸார் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## வீதி பாதுகாப்பு குறித்து கலந்துரையாடல்

கிளிநொச்சி, மே. 22

கிளிநொச்சி மாவட்டத்தின் வீதி பாதுகாப்பு மற்றும் வீதி போக்குவரத்து தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் கரைச்சி பச்சிலைப்பள்ளி பூநகரி பிரதேச சபையின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், ஓட்டோச் சாரதிகள், வலயக்கல்வித் திணைக்கள அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள்,

வீதிப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே - 22 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - வைகாசி 08
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : தசமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள்.

**இடபம்**
பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். வியாபாரத்தில் வேலையாட்களால் விரயம் வரும். சக ஊழியர்களை குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.

**சிம்மம்**
சவாலாக தெரிந்த சில வேலைகள் சாதாரணமாக முடியும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக் கிட்டும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கன்னி**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**துலாம்**
பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். புதுமை படைக்கும் நாள்.

**விருச்சிகம்**
அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**
உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**மகரம்**
இதுவரை இருந்த காரியத் தடைகள் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் நீங்களேபார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். விழிப்புடன் தேவைப்படும் நாள்.

**மீனம்**
சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வாகனத்தில் அதிக கவனம் தேவை. வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும். மற்றவர்களை விமர்சிக்க வேண்டாம்.

# யாழில் கடவுச்சீட்டு அலுவலகம் விரைவில் ஆரம்பிக்கப்படும்

## முன்னேற்றம் தொடர்பில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 22

யாழ். மாவட்டச் செயலகத்தில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள கடவுச்சீட்டு அலுவலகப் புனரமைப்பு வேலைகள் தொடர்பான முன்னேற்ற கலந்துரையாடல் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த பதில் அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள கடவுச்சீட்டு அலுவலகத்தின் புனரமைப்பு வேலைகளை விரைவாக நிறைவேற்றி முடிக்க வேண்டிய தேவைப்பாடுகளை வலியுறுத்தினார். மேலும், ஒப்பந்த காரர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைகளின் முன்னேற்றத்தை ஒவ்வொன்றாக ஆராய்ந்து உரிய அறிவுறுத்தல்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கினார்.



இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து, பதில் அரசாங்க அதிபர் கடவுச்சீட்டு அலுவலகம் அமையவுள்ள இடத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைகளை நேரடியாக ஆய்வு செய்ததுடன், வேலைகளை விரைவுபடுத்துவது தொடர்பாகவும் பணிப்புரைகள் வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலிலும் களத்தரிசிப்பிலும் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன், பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், பிரதம பொறியியலாளர் கே. திருக்குமார், உதவி மாவட்டச் செயலாளர் உ. தர்சினி, நிர்வாக உத்தியோகத்தர் ஆ. சத்தியமூர்த்தி மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (எ)

# நீர்வேலியில் சுக்கிரவார சிறப்புச்சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 22 ஆவது சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05.30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும், சிறப்புச்சொற்பொழிவை இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் "அசுரேந்திரன் மகேந்திரஞ்செல் படலம்" என்னும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவும், சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# யாழ். பழைய பூங்கா வளாகத்தை மேம்படுத்துவது குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தை மேம்படுத்துவது தொடர்பில் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன் தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த பதில் அரசாங்க அதிபர், பழைய பூங்கா வளாகமானது முதலாவது அரசாங்க அதிபர், தனியாரிடம் கொள்வனவு செய்யப்பட்டு அரசாங்க அதிபர் பெயரில் எழுதப்பட்ட வளாகம் எனவும், அவ் வளாகத்திலுள்ள சில காணிகள் ஏற்கனவே அரச திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டு அலுவலகங்கள் செயல்பட்டு வருவதாகவும், அந்த வளாகத்தை சரியான பொறிமுறைகள் ஊடாக பராமரிக்க வேண்டிய தேவைப்பாடுகள் உள்ளதாகவும் கூறினார். மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக முறையாக பேண வேண்டிய அவசியத்தையும் எடுத்துக் கூறினார்.

இக் கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1.பழைய பூங்கா வளாகத்தில் இனிவருங்காலத்தில் எந்தத் திணைக்களத்துக்கும் காணி வழங்குவதில்லை என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2.பழைய பூங்கா வளாகத்துக்கான நம்பிக்கை நிதியம் உருவாக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது

3.வளாகத்தில் உள்ள திணைக்களங்களிலிருந்து காணிக்கான விலைமதிப்பீட்டிற்கு அமைய, வாடகை அறவிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

4.பழைய பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள பழைய கச்சேரியின் பாதுகாப்பு கருதி வேலி அமைப்பது தொடர்பாகவும், புனரமைப்பது தொடர்பாகவும் தொல்லியல் திணைக்களத்துக்கு அறிவிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது

5.வளாகத்தில் மரக்கன்றுகளை நடுவது தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டது. (எ)

# பெண் தலைமை குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல்

யாழ்ப்பாணம், மே 22

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சால் வறுமைக் கோட்டிற்குட்பட்ட நிலையிலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் செயல் திட்டத்தின் மூலம் யாழில் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்படி யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு தையல் இயந்திரம் மற்றும் சுய தொழில் முயற்சிக்கான பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது உதவி பிரதேச செயலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர் உள்ளிட்ட பதவி நிலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலையில் கத்திக்குத்து தாக்குதல்

கொழும்பு, மே. 22

கொழும்பில் உள்ள லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் தாதியர் ஒருவரின் பணப்பையைத் திருடி தப்பிச் செல்ல முயன்ற நபர் ஒருவர் சிற்றூழியர் ஒருவரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கியமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிக்கும் நண்பகல்12 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

நோயாளிகளைப் பார்ப்பதற்காக வருகை தந்துள்ளதாக போலியான தகவலை வழங்கிச் சந்தேக நபர் வைத்தியசாலைக்குள் நுழைந்ததாகவும், அவர் போதைப் பழக்கத்துக்கு அடிமையானவர் என்றும் பொரளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


வைத்தியசாலையின் மூன்றாவது மாடியில் உள்ள ஏழாவது விடுதியில் உள்ள தாதியர் அலுவலகத்துக்குள் நுழைந்த நபர், அங்குள்ள பணப்பைகளைத் திருடி தப்பிச் செல்ல முயன்றுள்ளார்.

இதன்போது வைத்தியசாலையின் ஒரு சிற்றூழியர் அவரைப் பிடிக்க முயற்சித்துள்ளார்.

இந்த கட்டத்தில், சந்தேக நபர் தனது பையில் இருந்த கத்தியால் ஊழியரின் தலையில் தாக்கிவிட்டு மருத்துவமனையின் பின்புற சுவர் வழியாக தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

# பாதுகாப்புக்கு பொறுப்பானோரை உடனடியாக சபைக்கு அழையுங்கள்

## சபாநாயகரிடம் எதிர்க்கட்சிகள் கோரிக்கை



கொழும்பு, மே. 22

நாட்டில் எழுந்துள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதற்குப் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான முக்கிய அதிகாரிகளை உடனடியாக பாராளுமன்றுக்கு அழைக்குமாறு சபாநாயகரிடம் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில், எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கிடையே பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், ரவி கருணாநாயக்க, ஜீவன் தொண்டமான், காதர் மஸ்தான், திலித் ஜயவீர, தயாசிறி ஜயசேகர, ஜே.சி. அலவத்துவல, எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, பி.சத்தியலிங்கம், நிஸாம் காரியப்பர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாட்டு மக்களின் நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களினால் தங்களது செயற்பாடுகளையும் சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கட்சித் தலைவர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பணிகளை பாராளுமன்றத்திலும் வெளியிலும் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் மேற்கொள்ளக்கூடிய சூழலை உருவாக்கும் பொறுப்பும் கடமையும் சபாநாயகருக்கு உள்ளதை வலியுறுத்த வேண்டும் என குறித்த சந்திப்பின் போது, உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

எழுந்துள்ள நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு பொலிஸ்மா அதிபரையும், பிரமுகர்கள் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளரையும் உடனடியாக பாராளுமன்றத்துக்கு அழைக்குமாறு சபாநாயகரிடம் கோரவேண்டும் என கட்சித் தலைவர்கள் தீர்மானித்தனர்.

அதன்படி சபாநாயகரைச் சந்தித்த கட்சித் தலைவர்கள் தங்களது முடிவுகள் மற்றும் யோசனைகள் குறித்து சபாநாயகருக்கு அறிவித்ததாக எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# கடந்த வருடம் விண்ணப்பித்தும் கிடைக்காத கடவுச்சீட்டுக்கள்!

## சபையில் எதிரணி எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 22

கடந்த ஆண்டு விண்ணப்பித்த கடவுச்சீட்டுகள் இன்னும் பொதுமக்களுக்கு கிடைக்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடவுச்சீட்டுகளை பெறுவதில் மக்கள் பல சிக்கல்களை எதிர்கொள்வதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த ஆண்டு விண்ணப்பித்த 43,000 கடவுச்சீட்டுகள் தாமதமாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும் இதற்கு பதிலளித்த பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, கடவுச்சீட்டு வழங்குவது ஏற்கனவே முறையான முறையில் நடைபெற்று வருவதாக சுட்டிக்காட்டினார். (அ)

# இலங்கையில் சைபர் பாதுகாப்பு ஆணையம்

கொழும்பு, மே. 22

இலங்கையில் முன்மொழியப்பட்ட சைபர் பாதுகாப்பு சட்டத்தை விரைவாக நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக டிஜிற்றல் பொருளாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அமைச்சின் கூற்றுப்படி, தேசிய சைபர் பாதுகாப்பு தொடர்பான விதிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கும் செயல்படுத்துவதற்கும் பொறுப்பான ஒரு பிரத்தியேக சைபர் பாதுகாப்பு ஆணையகத்தை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் இந்த சட்டத்தில் அடங்கும். அதன்படி, வரைவுச் சட்டம் தற்போது சட்ட வரைவாளர் துறையில் மதிப்பாய்வு செய்யப் படுகிறது.

அரசாங்கம் தேசிய டிஜிற்றல் பாதுகாப்பு உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மின்சார திருத்த சட்டமூலம் வர்த்தமானியில் வெளியீடு

கொழும்பு, மே. 22

இலங்கை மின்சாரத் துறையின் மறுசீரமைப்பில் முன்னேற்றத்தைக் குறிக்கும் வகையில், முன்மொழியப்பட்ட மின்சார திருத்த சட்டமூலம் உத்தியோகபூர்வமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

புதிய சட்டமூலத்தின்படி, முன்னர் இருந்த, இலங்கை மின்சார சபையை 12 தனித்தனி நிறுவனங்களாகப் பிரிப்பதை நோக்கமாகக் கொண்ட விதிகள் நீக்கப்பட்டுள்ளன.

அதற்கு பதிலாக, திருத்தப்பட்ட சட்டமூலம் இலங்கை மின்சார சபையை நான்கு நிறுவனங்களாக மறுசீரமைக்க முன்மொழிகிறது,இவை அனைத்தும் முழுமையாக அரசுக்குச் சொந்தமானதாக அமையும்.

எரிசக்தித் துறையில் செயற்திறன் மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கான சீர்திருத்தங்களின் விரைவு மற்றும் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் பலர் இப்போது அரசாங்கத்துடன்!

## ஞானசார தேரர் பகிரங்கம்

கொழும்பு, மே. 22



உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் அரசாங்கத்துடன் இருப்பதாக பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இஸ்லாமிய கடும்போக்குவாத கொள்கையுடைய பலர் ஆளும் கட்சிக்குள் அடைக்கலம் புகுந்துள்ளதாக அவர் கூறினார்.

இந்த அரசாங்கத்தில் பிரதி அமைச்சராக கடமையாற்றி வரும் முனீர் முலாபர் இஸ்லாமிய கடும்போக்குவாதத்தை ஊக்குவிக்கும் நபர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நிட்டம்புவ பகுதியில் தன் வீர் அக்கடமியின் பொறுப்பாளராக முனீர் கடமையாற்றி வருவதாகவும், கடவுளுக்காக உயிர்த்தானம் செய்ய வேண்டுமென வலியுறுத்தும் குழுவொன்றை முனீர் வழிநடத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தை விடவும் இந்த அரசாங்கம் இஸ்லாமிய கடும்போக்குவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதில் மெத்தனப் போக்கினை பின்பற்றுவதாக ஞானசார தேரர் குறிப்பிட்டார்.

தம்மைக் கல்லால் அடித்து கொலை செய்ய வேண்டுமென கிழக்கு மாகாணத்தில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# போர்வீரர் நிகழ்வில் பங்கேற்காது இருக்க அநுர திட்டமிட்டிருந்தாரா?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு, மே. 22

தேசிய போர்வீரர் நினைவு தின நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பங்கேற்காமல் இருப்பதற்கு திட்டமிட்டிருந்தாரா? நிகழ்வுக்கான அழைப்பிதழில் பாதுகாப்புப் பிரதி அமைச்சரின் பெயர் பிரதம அதிதி எனக் குறிப்பிட்டிருந்தமைக்கான காரணம் என்ன என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்கு ஜனாதிபதி ஏற்கனவே திட்டமிட்டிருந்ததாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார். அவ்வாறெனில் அழைப்பிதழில் ஜனாதிபதியின் பெயர் ஏன் குறிப்பிடப்படவில்லை?

அவ்வாறெனில் அமைச்சர் விஜித ஹேரத் கூறியது பொய்யா? அவர் கூறியதைப் போன்று ஜனாதிபதி ஏற்கனவே இந்த நிகழ்வில் கலந்துகொள்ளத் திட்டமிட்டிருந்தால், அவரது பெயர் ஏன் பிரதம விருந்தினராக அச்சிடப்படவில்லை?

எதிர்க்கட்சிகளிலும், சமூக வலைத்தளங்களிலும் ஜனாதிபதி இந்த நிகழ்வில் கலந்துகொள்ளாமை தொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதன் காரணமாகவே இந்த குழப்பம் ஏற்பட்டது. ஜனாதிபதிக்கு எதிரான விமர்சனங்கள் தீவிரமடைந்ததன் காரணமாகவே அவர் இறுதி நேரத்தில் அந்த நிகழ்வில் பங்கேற்றார்-என்றார். (அ)

# வட்டார ரீதியாக வெற்றி பெற்ற வேட்பாளர் முழுமையான தகவல்கள் கிடைக்கவில்லை!

கொழும்பு, மே. 22

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வட்டாரவாரியாக வெற்றி பெற்ற வேட்பாளர்களில், 40 வீதமானோர் தொடர்பான தகவல்கள் இதுவரையில் தங்களுக்குக் கிடைக்கவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்னாயக்க இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜூன் 2 ஆம் திகதிக்குள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

இதன்படி, விரைவில் குறித்த வேட்பாளர்களின் பெயர் விவரங்களை அனுப்புமாறு தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளால் அரசியல் கட்சிகளுக்கும், சுயேச்சைக் குழுக்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவாதி என்று குறிப்பிடப்பட்ட

# மகிந்த ஆட்சியில்கூட இந்த நிலை இல்லை!

**கஜேந்திரகுமார் எம்.பி. விசனம்**

கொழும்பு, மே. 22

**வடக்கு காணிகள் குறித்து பிரசுரித்த வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்தும் வழிமுறை காணி கட்டளைச் சட்டத்தில் கிடையாது. 03 மாதத்துக்குள் காணி உரித்தை உறுதிப்படுத்தாவின் தமிழர்களின் தனிப்பட்ட மற்றும் பொது காரணிகள் அரசுடமையாக்கப்படும். இனவாதி என்று குறிப்பிடப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் கூட இந்நிலை ஏற்படவில்லை. இந்த வர்த்தமானியை அரசாங்கம் உடன் வாபஸ் பெற வேண்டும். இல்லையேல் நல்லிணக்கம் முடிவுக்கு கொண்டு வரப்படும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எச்சரித்தார்.**

பாராளுமன்றத்தில் வடக்கு மாகாணத்தில் உள்ள காணிகள் தொடர்பில் அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானியை மீளப்பெறல் தொடர்பான பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 2025.03.28 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் காணிகளுக்கான உரித்தை 3 மாத காலத்துக்குள் கோர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானியின் பிரகாரம் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது இடைநிறுத்தப்பட்டுள்ளது



என்று குறிப்பிடப்படுகிறது.

காணி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இந்த வர்த்தமானியை இடைநிறுத்த முடியாது. அதற்கான சட்ட ஏற்பாடுகள் ஏதும் கிடையாது.03 மாத காலத்துக்குள் உரித்துக்களை உறுதிப்படுத்தாவிடின் தமிழ் மக்களின் தனியார் காணிகள் மற்றும் பொது காணிகள் அரசுடமையாக்கப்படும் என்பதை உறுதியாக குறிப்பிட முடியும். ஆகவே இந்த வர்த்தமானியை மீளப்பெற வேண்டும்.

தேர்தல் காலத்தில் தான் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. வர்த்தமானி குறித்து எவரும் அறியவில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த இனவாதத்தின் உச்சம் என்று குறிப்பிடப்பட்டது. அவரது ஆட்சியில் கூட இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெற வில்லை. அரசாங்கம் ஏன் இந்த விடயத்தில் மறைமுகமாகச் செயற்பட வேண்டும். காணி பிரச்னைக்கு தீர்வு காண வேண் டுமாயின் குழுவோ அல்லது ஆணைக்குழுவோ அமைத்து இவ்விடயம் ஆராயப்பட்டி ருக்க வேண்டும் நாங்களும் ஒத் துழைப்பு வழங்கியிருப்போம்-என்றார். (அ)

# ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும்!

**பிரதமர் கலாநிதி ஹரிணி**

கொழும்பு, மே. 22

பயிற்சி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் நடவடிக்கையானது தற்போதுள்ள முறைமைக்கேற்பவே மேற்கொள்ளப்பட் டுள்ளதாகவும், அந்த முறைமையில் உள்ள குறைபாடுகள் காரணமாக எழுந்துள்ள பிரச்னைகளைத் தீர்க்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

சபையில் எதிர்க்கட்சியினர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே பிரதம இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சேவையில் உள்ள ஆசிரியர்களின் ஓய்வு காரணமாக பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள், கஷ்டப் பகுதிகளில் உள்ள பாடங்களின் பன்முகத்தன்மை, பாட மட்டத்தில் ஆசிரியர் வெற்றிடங்களைக் கணக்கிடுதல் மற்றும் ஆசிரியர் கல்லூரி மட்டத்தில் ஒரே நேரத்தில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான வசதிகள் உள்ளிட்ட அனைத்து காரணிகளையும் கருத்திற் கொண்டு பயிற்சி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் தீர்மானம் மேற்கொள்ளப்படுகிறது.

அவர்கள் தேசிய கல்விக்கல்லூரி டிப்ளோமா பட்டத்தைப் பெற்ற பின்னர், கல்வியியற் கல்லூரி இறுதியாண்டு பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டாலும், சம்பந்தப்பட்ட பகுதியில் வெற்றிடங்கள் இல்லாவிட்டால், நியமனங்கள் வழங்கும்போது, அவர்கள் பிற மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு அனுப்பப்படுவார்கள்.

கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பில், ஆட்சேர்ப்பு செய்யப்படும் ஆசிரியர்கள் நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்ற இணங்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், அந்தந்த மாகாணங்களில் பயிற்சி பெறுநர்களால் விண்ணப்பிக்கப்பட்ட பாடத்தில் வெற்றிடங்கள் இல்லாத சந்தர்ப்பத்தில், பயிற்சி பெறுநர்களின் விருப்பத்தின் அடிப்படையில், அவர்கள் நாட்டின் பிற இடங்களில் அந்த வெற்றிடங்கள் உள்ள பகுதிகளுக்கு அனுப்பப்படுவார்கள்.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதில் சிக்கல்கள் எழுந்துள்ளன. இதற்குக் காரணம், நாம் தற்போதுள்ள முறைகளைப் பின்பற்றினாலும், ஆட்சேர்ப்பு மற்றும் வெற்றிடங்களைக் கண்டறியும் செயல்பாட்டில் உள்ள சிக்கல்கள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது -என்றார். (அ)

# மீனவர்களுக்கு காப்புறுதி!

கொழும்பு, மே. 22

கடற்றொழிலை அபிவிருத்தி செய்தல் மற்றும் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு, மீனவர் சமூகத்துக்கான திடீர் விபத்து காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள மீனவ சமூகத்தினர், தங்கள் பணியின் அபாயகரமான தன்மை காரணமாக, உயிருக்கு ஆபத்தான விபத்துக்களுக்கு ஆளாகும் அபாயம் அதிகம் காணப்படுகிறது.

புதிய அரசாங்கம் இந்த விடயத்தில் விசேட கவனம் செலுத்தி, இந்த விபத்துகளுக்கு இழப்பீடு வழங்குவதன் மூலம் மீனவர்கள் நீண்டகாலமாக தொழிலில் ஈடுபடுவதை உறுதி செய்வதற்காக இந்த காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக விவசாய மற்றும் விவசாய காப்பீட்டுச் சபை தெரிவித்துள்ளது.

விவசாய காப்பீட்டு சபை ஏற்கனவே பல்வேறு விவசாய மற்றும் விவசாயம் தொடர்பான துறைகளுக்கான காப்பீட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், மீனவ சமூகத்திற்கு தனித்துவமான காப்பீட்டுத் திட்டமாக விவசாய காப்பீட்டுச் சபையால் இந்த காப்புறுதி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

# அரச வைத்தியசாலைகளில் கடும் மருந்து பற்றாக்குறை!

கொழும்பு, மே. 22

நாடு முழுவதும் உள்ள பல வைத்தியசாலைகளில் தற்போது மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நுண்ணுயிர் எதிர்ப்பிகளுடன், வலி நிவாரணிகள் மற்றும் இன்சுலின் ஆகியவற்றுக்கும் கடுமையான பற்றாக்குறை நிலவுவதாக சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதிக எண்ணிக்கையிலான மருந்துகளின் பற்றாக்குறைகள் வைத்தியசாலைகளில் காணப்படுகின்றன.

கடந்த ஏப்ரல் மாத இறுதிக்குள், வைத்திய விநியோகப் பிரிவில் சுமார் 180 வகையான மருந்துகள் கையிருப்பில் இல்லை.

மேலும், வைத்தியசாலை அமைப்பில் சுமார் 50 மருந்துகள் கையிருப்பில் இல்லை.

நிலைமை இன்னும் மோசமாகிக் கொண்டிருக்கிறது. நுண்ணுயிர் எதிர்ப்பிகள், வலி நிவாரணிகள் மற்றும் இன்சுலின் போன்றவற்றிலும் கூட பிரச்சனை இருப்பதாக எங்களுக்குக் தகவல்கள் கிடைக்கின்றன- என்றார். (அ)

# ஜனாதிபதியின் கருத்தினால் போர் வீரர்களுக்கு அவமதிப்பு

**உதய கம்மன்பில சுட்டிக்காட்டு**

கொழும்பு, மே. 22

யுத்தக் களத்தில் போரிட்ட போர் வீரர்களை சிப்பாய்கள் என்று கூறி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவமதித்துள்ளார் என பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கட்சித் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதிகள் முகம் சுழித்துக் கொள்வார்கள் என்ற பயத்தில் ஜனாதிபதி தேசியப் போர் வீரர் நிகழ்வில் கலந்துகொள்ளாமல் இருக்கவே தீர்மானித்திருந்தார். இருந்தபோதும், தேசத்தை நேசிக்கும் மக்களால் ஏற்படுத்தப்பட்ட பெரும் அழுத்தத்தின் காரணமாக விருப்பமில்லாவிட்டாலும் தேசிய போர்வீரர் நிகழ்வில் கலந்துகொள்ள நேர்ந்தது.

ஆனால், போர்வீரர்களின் முன்னிலையில் பேசும்போதும் போர்வீரர்கள் என்ற சொல்லைப் பயன்படுத்தாமலிருக்க முயற்சித்தார். போர் வீரர்களை நினைவு கூருவதற்காகவே இந்த நிகழ்வு



ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், ஜனாதிபதி போர் வீரர்களை சிப்பாய் என்றே அடையாளப்படுத்தினார். ஒவ்வொரு போர் வீரரும் சிப்பாயாக இருந்தாலும் சகல சிப்பாய்களும் போர் வீரர்களாக இருக்கமாட்டார்கள். சிப்பாய் ஒருவர் போர் வீரராக வேண்டுமென்றால் அவர் யுத்த பூமியில் போரிட்டிருக்க வேண்டும்.

ஆகவே, எமது போர் வீரர்களுக்கான தேசிய போர்வீரர் நிகழ்விலேயே அவர்களை சிப்பாய்கள் என்று கூறி போர் வீரர்களை ஜனாதிபதி அவமதித்து விட்டார் என்பதே எங்களின் நம்பிக்கையாகும்-என்றார். (அ)

# 80ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் 18 நாட்களில் இலங்கை வருகை

கொழும்பு, மே. 22

இந்த மாதத்தின் முதல் 18 நாட்களில் நாட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 80 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

அதன்படி, இந்த காலகட்டத்தில் 80,421 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபை அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு இதுவரை நாட்டுக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 97,305,000 ஆகும் எனவும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு காணிகளில் வேறு தரப்பை குடியேற்றும் தேவை எமக்கு இல்லை

## சபையில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க



கொழும்பு, மே. 22

**தமிழ் மக்களின் காணிகளில் பிறிதொரு தரப்பினரை குடியேற்றவேண்டிய தேவை எமக்கு கிடையாது. மகிந்த மற்றும் ரணில் ஆகியோரை பார்த்த கோணத்தில் எங்களை பார்க்காதீர்கள், தேசிய நல்லிணக்கத்தை நாங்கள் உறுதிப்படுத்தியுள்ளோம். காணி அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சும் கூட்டாக சமர்ப்பிக்கும் அமைச்சரவைப் பத்திரம் ஊடாக விசேட குழு ஒன்று நியமிக்கப்படும்.அதனூடாக காணி பிரச்னைக்கு தீர்வு எட்டப்படும் என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வின் போது வடக்கு மாகாணத்தில் உள்ள காணிகள் தொடர்பில் அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானியை மீளப்பெறல் தொடர்பான பிரேரணையை பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைத்தார்.இந்த பிரேரணை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மக்களின் காணிகளை சுவீகரிக்கவேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றி பெற்றுள்ளது. வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மூன்று உறுப்பினர்கள் எம்முடன் இருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் நாங்கள் ஏன் வடக்கு மக்களுக்கு அநீதி இழைக்கும் வகையில் செயற்பட வேண்டும் ,?

இந்த வர்த்தமானி தொடர்பில் தமிழ் பிரதிநிதிகள் பல விடயங்களை முன்வைத்துள்ளார்கள். தமிழ் மக்களின் காணிகளில் பிறிதொரு தரப்பினரை குடியேற்ற வேண்டிய தேவை எமக்கு கிடையாது. மகிந்த மற்றும் ரணில் ஆகியோரை பார்த்த கோணத்தில் எங்களை பார்க்காதீர்கள் , தேசிய நல்லிணக்கத்தை நாங்கள் உறுதிப்படுத்தியுள்ளோம்.

காணி பிரச்னைக்கு தீர்வு காணும் பொருட்டு 09 மாகாணங்களையும் வரையறுத்து இந்த வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்துக்கு மாத்திரம் பிரத்தியேகமாக பிரசுரிக்கப்படவில்லை. காணி பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு காணி அமைச்சு மற்றும் சுற்றாடல்துறை அமைச்சு ஒன்றிணைந்து கூட்டு பத்திரத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க தீர்மானித்துள்ளது.

இந்த கூட்டு பத்திரம் ஊடாக விசேட குழு ஒன்று நியமிக்கப்படும்.அதனுடாக தீர்வு காணப்படும். ஆகவே தமிழ் மக்களின் காணிகளை கையகப்படுத்தும் நோக்கம் அரசாங்கத்துக்கு சிறிதளவேனும் கிடையாது.அவ்வாறு செயற்பட வேண்டிய அவசியமும் இல்லை-என்றார். (அ)

# சிறிலங்கன் விமான சேவை நிறுவன முறைகேடுகள் குறித்து விசாரிக்க குழு நியமிக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, மே. 22

சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்தில் நடந்துள்ள ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரிக்க ஜனாதிபதி அலுவலகத்தின் தலைமையில் குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தினார்.

சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்தின் பணிப்பாளர்கள் குழு மற்றும் அனைத்து, இணைந்த தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்தின் உரிமையை அரசாங்கத்தின் கீழ் வைத்திருக்கும் கொள்கை முடிவுக்கு இணங்க, பணிப்பாளர்கள் குழுவால் தயாரிக்கப்பட்ட வர்த்தகத் திட்டத்தின் இலக்குகளை அடைவது குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அதன்படி, பணப்பாய்வு முகாமைத்துவம் மற்றும் நிறுவனத்தின் செயல்திறனை அதிகரிப்பதன் மூலம் சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்தை நட்டம் அடையாத நிறுவனமாக கட்டியெழுப்ப, அதன் அனைத்து தரப்பினரின் பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்பின் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

கூட்டுப் பங்களிப்பு இல்லாமல் சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்தை கட்டியெழுப்ப முடியாது என இங்கு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, விமான சேவை நிறுவனத்தின் செயற்பாட்டுச் செலவுகளுக்காக தொடர்ந்தும் திறைசேரியிடமிருந்து நிதியைப் பெற முடியாத சூழலில், நிறுவனத்திற்குள்ளேயே நிறுவனத்தைக் கட்டியெழுப்புவதற்கான திறனை வளர்த்துக் கொள்ள வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தினார். (அ)

# திடீரென மூடப்பட்டது தொழிற்சாலை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு

கொழும்பு, மே. 22

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்துக்குள் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்று முன்னறிவிப்பின்றிச் செயற்பாடுகளை நிறுத்திவிட்டதாகக் கூறப்படுகிறது.

நெக்ஸ்ட் மன்பக்ச்சரிங் தனியார் நிறுவனமே இவ்வாறு திடீரென மூடப்பட்டது.

இதனால் 1,400 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் திடீரென வேலையிழக்க நேரிட்டுள் ளது.

தகவல்களின்படி, தொழிற்சாலை வளாகம் சீல் வைக்கப்பட்டுள்ளது.

தற்போது பாதுகாப்புப் பணியாளர்கள் மட்டுமே அந்த இடத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

தங்களுக்கு எந்த முன்னெச்சரிக்கையோ, விளக்கமோ வழங்கப்படவில்லை என்றும், இழப்பீடு அல்லது மாற்று வேலை வாய்ப்பு குறித்து எந்த தெளிவும் இல்லாமல் பலர் இப்போது தங்கள் எதிர்காலம் குறித்து நிச்சயமற்றவர்களாக இருப்பதாகவும் ஊழியர்கள் கூறுகின்றனர். (அ)

# ஜனாதிபதி அலுவலக வாகனங்கள் ஏல விற்பனை குறித்து முறைப்பாடு!

கொழும்பு, மே. 22

ஜனாதிபதி அலுவலக வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு சுமார் 300 மில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சுவர்ணபூமி தேசிய இயக்கத்தினால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி அலுவலக வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்யும் நடவடிக்கை கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது 26 வாகனங்கள் ஏலமிடப்பட்ட நிலையில், அவற்றில் 17 வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டதாகவும் முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# மின்சாரம் தாக்கி சிறுமி உயிரிழப்பு!

கொழும்பு, மே. 22

வெலம்பொட, கோவில் கந்த பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் மின்சாரம் தாக்கி 11 வயது சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் மாலை நடந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் கோவில்கந்த வட்டப்பொல பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கண்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வெலம்பொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# தேங்காய் அறுவடை அதிகரிக்கும்

கொழும்பு, மே. 22

கடந்த ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் தேங்காய்களின் அறுவடை அதிகரிக்கும் என லுணுவில தேங்காய் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு 555 மில்லியன் தேங்காய் அறுவடை எதிர்பார்க்கப்படுவதாக நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் அஜித் ஜெயவீர தெரிவித்தார்.

மேலும், 2024 ஆம் ஆண்டில் 477 மில்லியன் தேங்காய் அறுவடை கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கோழிப் பண்ணையில் தகராறு ஊழியர் ஒருவர் அடித்து கொலை!

கொழும்பு, மே. 22

அநுராதபுரம் - மதவாச்சி பிரதேசத்தில் உள்ள கோழி பண்ணை ஒன்றில் வேலை செய்யும் இரு ஊழியர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்டவர் மட்டக்களப்பு - வந்தாறுமூலை பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடையவர் ஆவார்.

சம்பவ தினத்தன்று, கோழிப் பண்ணையில் வேலை செய்யும் இரு ஊழியர்களுக்கு இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறின்போது சந்தேக நபர் சக ஊழியரை அடித்துக் கொலை செய்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# கொழும்பு மாநகர ஆட்சி மைத்திரி-ரணில் சந்திப்பு

கொழும்பு, மே. 22

முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் பேச்சு ஒன்று இடம் பெற்றுள்ளது.

கொழும்பு மாநகர சபை உட்பட எதிர்க்கட்சி பெரும்பான்மையை கொண்ட அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களிலும் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக இடம்பெற்ற இந்த பேச்சு வெற்றி பெற்றதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு மல் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# கொழும்பில் வடிகால் கட்டமைப்புக்களை விரைவாக சீரமைக்க ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, மே. 22

கொழும்பு மாவட்டத்தில் டெங்கு மற்றும் சிக்கன்குன்யா நோய்கள் வேகமாக அதிகரித்து வருவதால், கால்வாய்கள் மற்றும் வடிகால் கட்டமைப்பை விரைவாக புனரமைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் அதிகாரிகளுடன் நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

கொழும்பு மாவட்டத்தில் கால்வாய்கள் மற்றும் வடிகால் கட்டமைப்புகளை முறையாகப் பேணாமை குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்த ஜனாதிபதி, குப்பை மற்றும் கழிவுநீரை முறையாக அகற்றுவது குறித்து நிலையான தீர்வுகளுடன் கூடிய திட்டத்தைத் தயாரிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவுறுத்தினார்.

அது குறித்த திட்டங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.



சுற்றுச்சூழல் பொலிஸாரை பலப்படுத்தல் மற்றும் சமூக குழுக்களின் செயலூக்கமான பங்களிப்பைப் பெறுவதன் ஊடாக முறையற்ற கழிவகற்றல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்பு பதுக்கிய வர்த்தகர்களுக்கு அதிகாரிகள் கடும் எச்சரிக்கை

## திருகோணமலையில் நேற்று திடீர் சோதனை



திருகோணமலை, மே 22

**திருகோணமலை, கந்தளாய் பகுதியில் நேற்று இடம்பெற்ற திடீர் சோதனையின் போது, கட்டுப்பாட்டு விலையை மீறி பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்கள் மீது நுகர்வோர் விவகார அதிகார சபையினர் விசாரணைகளை மேற்கொண்டனர். அத்தோடு, உப்பு பதுக்கிய வர்த்தகர்களை கடுமையாக எச்சரித்தனர்.**

இந்தச் சோதனையின் போது அரிசி மற்றும் உப்பை சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருந்த வர்த்தகர்களும் கண்டறியப்பட்டனர். இதையடுத்து, பல கடைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

சோதனையின் ஒரு பகுதியாக, அதிகாரிகள் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் காலாவதியான உணவுப் பொருட்களையும் ஆய்வு செய்தனர்

இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகள் தொடரும் பட்சத்தில், கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது. (எ)

# அம்பாறையில் அதிகளவான டெங்கு நோயாளர் இனங்காணல்

கல்முனை, மே 22

திருகோணமலை, அம்பாறையின் கல்முனை உள்ளிட்ட பிரதேசங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

மே 19ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் 15 மாவட்டங்களில் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்ப டுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பில் 40,108 சுற்றுச்சூழல்கள் சோதனைக்குட்ப டுத்தப்பட்டன. இவற்றில் 10,613 இடங்கள் நுளம்புகள் பெருகக் கூடியவாறு காணப்படுகின்றன. இது நூற்றுக்கு 25 சதவீதமாகும்.

நான்கில் ஒரு சூழல் டெங்கு நுளம்பு பரவக் கூடியவாறு அபாயம் மிக்கவையாகக் காணப்படுகின்றன. எனவே, சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருக்குமாறு மக்களை அறிவுறுத்துவதாக டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் சுகாதார அமைச்சால் அம்பாறை மாவட்டத்தில் இனங்காணப்பட்ட பகுதிகளில் படையினரின் ஒத்துழைப்புடன் டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சுகாதாரப் பிரிவில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி இஸட். சராப்டீன் தலைமையில் வீடுகள், வடிகான்கள், பொது இடங்கள் என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. டெங்கு குடம்பிகள் இனங்காணப்பட்ட வீடுகளின் உரிமையாளர்க ளுக்கு எதிராக சட்ட நடவடிக் கைகள் எடுக்கப்படவுள்ளன. மேலும் இதன்போது வீடுகள், பாடசாலைகள் உள்ளிட்ட அனைத்து சுற்றுப்புறங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. (எ)

# தீவிரவாத ஒடுக்குமுறைகளால் பாரம்பரிய முஸ்லிம்கள் பாதிப்பு

## ஏறாவூரில் ஞானசார தேரருக்கு எச்சரிக்கை

மட்டக்களப்பு, மே 22

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரில் வாழும் பாரம்பரிய முஸ்லிம் சமூகம் தீவிரவாத ஒடுக்குமுறை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சமூகத்தை சேர்ந்தவர்கள் தங்கள் மத்தியில் உள்ள தீவிரவாத சக்திகள் குறித்து தகவல்களை வழங்கியுள்ளதுடன் இவற்றை பகிரங்கப்படுத்துமாறு கோரியுள்ளனர் என பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

லிபியா கடாபி குழு என்ற குழுவினர் வட்ஸ்அப் மூலம் அச்சுறுத்தும் செய்திகளை வெளியிட்டுள்ளனர். தீவிரவாத கொள்கைகளை எதிர்க்கும் நபர்களின் பெயர்களை அவர்கள் வெளியிட்டுள்ளனர் எனவும் தேரர் கூறினார்.

ஏறாவூரை சேர்ந்த நபர் ஒருவரின் பெயரை வெளியிட்டுள்ள ஞானசார தேரர், அவர் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

இது தொடர் பில் படையினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புடைய இஸ்லாமிய தீவிரவாதம் இலங்கையில் பரவுவது குறித்து சமீபத்தில் தான் தகவல்களை வெளியிட்டதை தொடர்ந்து மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் ஞானசார தேரர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு இது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளேன்.

நாட்டில் தீவிரவாத நடவடிக்கைகள் மற்றும் மத பதற்றம் ஆபத்தான விதத்தில் அதிகரித்துள்ளதை இது வெளிப்படுத்துகின்றது எனவும் தேரர் தெரிவித்தார். (எ)

# மட்டு. போதனா மருத்துவமனையில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை

மட்டக்களப்பு, மே 22

கிழக்கு மாகாண மருத்துவத்துறை வரலாற்றில் முதன் முறையாக மட்டக்களப்பு போதனா மருத்துவமனை சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையை முன்னெடுத்து சாதனை படைத்துள்ளது.

இது தொடர்பில் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் நேற்று செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது.

இதில், மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் கலாரஞ்சினி கணேசலிங்கம், மயக்க மருந்து மற்றும் தீவிர சிகிச்சை பிரிவுத் தலைவர் மதனழகன், சிறுநீரக சிகிச்சைப் பிரிவின் தலைவர் முஜாஹித் உட்பட இந்த சிகிச்சையில் பங்குகொண்ட மருத்துவ நிபுணர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பணிப்பாளர் கலாரஞ்சினி கூறுகையில்,

"மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் பல்வேறுபட்ட சத்திர சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன. சிறிய, பெரியளவிலான சத்திர சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு வருடத்துக்கு 10ஆயிரத்துக்கும் அதிகமான பெரியளவிலான சத்திர சிகிச்சைகளும் 12, 500இற்கும் அதிகமான சிறிய சத்திர சிகிச்சைகளும் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் இந்த மாதம் 15ஆம் திகதி சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதியைப்பெற்று இந்த சத்திர சிகிச்சை நடைபெற்று சிறுநீரக மாற்று சிகிச்சை பெற்றவர் நேற்று வீடு சென்றுள்ளார்.


இந்த சிறுநீரக மாற்று சிகிச்சையை ஒரு குழுவாக செய்து முடித்துள்ளனர். மருத்துவ நிபுணர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் கொழும்பு, அநுராதபுரம் மருத்துவமனையில் உள்ள விசேட மருத்துவ நிபுணர்கள் ஆகியோரின் அனுசரணையுடன் இந்த மாற்று சத்திர சிகிச்சை வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் முதன் முதலாக இந்த சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் ஒரு மைல் கல்லாக இந்த அறுவை சிகிச்சை காணப்படுகின்றது இதுபோன்ற சிகிச்சைகளை தொடர்ந்து செய்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம்"-என்றார்.

# தலை, கால் துண்டிக்கப்பட்ட நிலையில் இளம் குடும்பஸ்தரின் சடலம் நேற்று மீட்பு

## மட்டு. மண்முனை மீனவர்கள் அச்சம்



மட்டக்களப்பு, மே 22

மட்டக்களப்பு - மண்முனை பாலத்தின் கீழ் ஆற்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் முதலை கடிக்கு இலக்காகி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 32 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த நபர் நேற்று முன் தினம் மூவருடன் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு கொண்டிருந்த போது முதலை இழுத்துச் சென்றது

இந்த நிலையில் அவரைத் தேடும் பணியில் மீனவர்கள், பொலிஸார், சுழியோடிகள், பொதுமக்கள் ஈடுபட்டனர்.

இதையடுத்து நேற்றுக் காலை ஆற்றிலிருந்து தலை, கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலங்களில் இப்பகுதியில் முதலைகளின் நடமாட்டம் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் இச் சம்பவம் நடந்தேறியுள்ளமை இப்பகுதி மீனவர்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, மே 22

மட்டக்களப்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் வீட்டின் முன்பு கடந்த 2021இல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பிலான வழக்கை மட்டக்களப்பு நீதிமன்றம் எதிர்வரும் ஜூன் மாதம் 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு ஜூன் 21ஆம் திகதி வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்னால் அமைச்சரின் மெய்ப்பாதுகாப்பு உத்தியோகத்தர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 28 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்ததையடுத்து மெய்ப்பாதுகாப்பு உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்று வந்த வழக்கு விசாரணையில் பாதிக்கப்பட்டவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் இந்தக் கொலை தொடர்பில் பொலிஸார் உரிய விசாரணை நடத்தவில்லை எனத் தொடர்ந்து ஆட்சேபித்து வந்ததுடன் உயிரிழந்தவரின் பெற்றோரும் குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு மாற்றுமாறு சட்டத்தரணி ஊடாக கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் குறித்த விசாரணையை கொழும்பு குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினர் மேற்கொண்டு வந்த நிலையில் இராஜாங்க அமைச்சரின் வாகனச் சாரதி சந்தேகத்தின் பேரில் கொலைக் குற்றத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் முன் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் ஜூன் மாதம் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு அன்றைய தினத்துக்கு வழக்கை ஒத்திவைத்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனுக்கு எதிரான போரை நிறுத்த தயார்!

## ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவிப்பு

மொஸ்கோ, மே 22

**உக்ரைனுக்கு எதிரான போரை முடிவுக்கு கொண்டுவர ரஷ்யா தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் 2 மணி நேரம் தொலைபேசி உரையாடலுக்குப் பிறகு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்தார்.**



உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரியில் போர் தொடுத்தது. இதற்கு உக்ரைனும் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு இப் போரை நிறுத்த உக்ரைன் - ரஷ்யா ஆகிய இரு தரப்புக்கும் அழுத்தம் கொடுத்து வருகிறார். என்றாலும் இதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்த நிலையில், புடினுடன் ட்ரம்ப் தொலைபேசியில் 2 மணி நேரம் பேசினார். அப்போது, ரஷ்யா - உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பில் இரு தலைவர்களும் விரிவாக விவாதித்தனர்.

இதன் பிறகு செய்தியாளர்களிடம் புடின்கூறுகையில், "மூன்று ஆண்டு கால போரை முடிவுக்கு கொண்டுவர உக்ரைனுடன் இணைந்து பணியாற்ற ரஷ்யா தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதியிடம் கூறியுள்ளோம். ஆனால், அமைதியை நோக்கிய எந்தவொரு முன்னேற்றத்துக்கும் விதிமுறைகளை நிர்ணயிப்பது அவசியம்.

ரஷ்யா உடனடியாக நிபந்தனையற்ற 30 நாட்கள் போர் நிறுத்தத்தை ஏற்க வேண்டும் என்று உக்ரைன், அதன் ஐரோப்பிய கூட்டாளிகள் மற்றும் அமெரிக்கா இணைந்து வலியுறுத்தியுள்ளன.

பொருத்தமான ஒப்பந்தங்கள் எட்டப்பட்டால், போர் நிறுத்தம் நிச்சயமாக சாத்தியமாகும். பிரச்னைக்கான மூல காரணங்கள் அகற்றப்பட வேண்டும் என்பதே எங்களது நிலைப்பாடாகும்"- என்றார்.

உக்ரைனின் 20 சதவீத நிலப்பகுதி தற்போது ரஷ்ய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும், ரஷ்ய இராணுவம் தொடர்ந்து முன்னேறி வருகிறது. எதிர்காலத்தில் நேட்டோவில் உக்ரைன் இணையக் கூடாது, கிரீமியாவை ரஷ்யாவின் ஒரு பகுதியாக அங்கீகரிக்க வேண்டும். தற்போது போரில் கைப்பற்றப்பட்ட பகுதிகள் தங்களிடமே நீடிக்க அனுமதிக்க வேண்டும். மேலும் உக்ரைனின் 4 பகுதிகளை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என ரஷ்யா வலியுறுத்தி வருகிறது. ஆனால், இந்த நிபந்தனைகளை உக்ரைன் நிராகரித்துள்ளது. (எ)

# பொற்கோவிலில் வான் பாதுகாப்பு

புதுடில்லி, மே 22

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலுள்ள பொற்கோவிலில் வான் பாதுகாப்பு அமைப்பு அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜம்மு - காஷ்மீர் யூனியன் பிரதேசம் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காம் பகுதியில் உள்ள பிரபல சுற்றுலாத் தலத்தில் கடந்த மாதம் 22ஆம் திகதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் உட்பட 26 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டன்ஸ் பிரண்ட் என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது.

பஹல்காம் தாக்குதலுக்குப் பதிலடியாக கடந்த 7ஆம் திகதி பாகிஸ்தான் மீது ஒப்ரேஷன் சிந்தூர் இராணுவ நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டது. இதையடுத்து இந்தியா மீது ஏவுகணை ட்ரோன்கள் மூலம் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது.

இந்தியாவின் காஷ்மீர் குஜராத் பஞ்சாப் போன்ற எல்லை மாநிலங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த மோதலின்போது பஞ்சாப்பின் அமிர்தசரஸில் உள்ள சீக்கியர்களின் புனிதத் தலமான பொற்கோவிலை குறிவைத்தும் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது.

இந்த நிலையில், தாக்குதலை முறியடிக்க பொற்கோவிலில் வான் பாதுகாப்பு அமைப்பு அமைக்க கோவில் நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. (எ)

# அட்டாரி - வாகா எல்லையில் மீள கொடியிறக்கும் நிகழ்வு

## பொதுமக்களுக்கு அனுமதி

புதுடில்லி, மே 22

அட்டாரி - வாகா எல்லையில் கொடியிறக்கும் நிகழ்வை காண பொதுமக்களுக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் போர்ப் பதற்றம் காரணமாக அட்டாரி - வாகா எல்லையில் கொடியிறக்க நிகழ்வு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

தற்போது எல்லையில் அமைதி திரும்பிய நிலையில் தினமும் அட்டாரி - வாகா எல்லை கொடியிறக்க நிகழ்வு நடைபெறும் என எல்லை பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. (எ)

# காஸாவில் தொடரும் கொடூரங்கள் இஸ்ரேலுக்கு கூட்டாக எச்சரிக்கை

லண்டன், மே 22

காஸாவில் இஸ்ரேல் இராணுவம் தனது நடவடிக்கைகளை மேலும் மோசமான விதத்தில் விரிவுபடுத்தினால் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிவரும் என்று பிரிட்டன், கனடா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் கூட்டாக எச்சரித்துள்ளன.

பிரிட்டிஷ் பிரதமர், பிரான்ஸ் கனடா தலைவர்கள் இணைந்து இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளதுடன், இராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் உடனடியாக நிறுத்த வேண்டும். மனிதாபிமான உதவிகள் காஸாவுக்குள் செல்வதற்கு உடனடியாக அனுமதிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இஸ்ரேல் 11 வார கால முற்றுகை மற்றும் தடையின் பின்னர் அடிப்படை எண்ணிக்கையிலான உணவுகளை காஸாவுக்குள் அனுமதிக்கும் என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஞாயிற்றுக்கிழமை தெரிவித்திருந்தார்.

எனினும் இது போதுமானதல்ல எனத் தெரிவித்துள்ள மேற்குலகின் மூன்று தலைவர்களும் பொதுமக்களுக்கு அத்தியாவசிய மனிதாபிமான உதவிகளை மறுப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. இது சர்வதேச மனித உரிமைச் சட்டத்தை மீறுவதற்கு ஒப்பானது எனத் தெரிவித்துள்ளனர். (எ)

# தண்ணீரின்றி தவிக்கும் 4 இலட்சம் குழந்தைகள்!

## காஸாவில் தொடரும் சோகம்

காஸா, மே 22

காஸாவுக்கான உதவி நிறுத்தப்பட்டதிலிருந்து, சுமார் 4 இலட்சம் குழந்தைகள் உட்பட 10 இலட்சம் மக்களின் தினசரி தண்ணீர் விநியோகம் சராசரியாக 16 லீற்றரில் இருந்து 6 லீற்றராகக் குறைந்துள்ளதாகவும் எரிபொருள் தீர்ந்துவிட்டால் நிலைமை மேலும் மோசமடையலாம் எனவும் யுனிசெப் எச்சரித்துள்ளது

ஐக்கிய நாடுகள் மற்றும் பிற உதவி அமைப்புகள் காஸாவில் நிலவும் மோசமான தண்ணீர் நெருக்கடி பற்றி எச்சரித்துள்ளன.

மார்ச் மாத தொடக்கத்திலிருந்து இஸ்ரேலின் முற்றுகை உதவி மற்றும் எரிபொருள் விநியோகத்தைத் தடுத்துள்ளது.

இது இதுவரை இல்லாத அளவு மிகப்பெரிய எல்லை முடக்கமாகும்.

ஒக்ரோபர் 7ஆம் திகதி தாக்குதலின் போது பிடிக்கப்பட்ட பணயக் கைதிகளில் மீதமுள்ளவர்களை விடுவிக்க ஹமாஸ் மீது அழுத்தம் கொடுப்பதே இதன் நோக்கம் என இஸ்ரேல் கூறியுள்ளது.

இதேவேளை, காஸா மக்களுக்கு சுத்திரிக்கப்பட்ட தண்ணீர் வழங்கும் உப்பு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு காரணமாக முழுத் திறனில் செயல்பட முடியாமல் உள்ளன. காஸாவில் உள்ள தண்ணீர் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பில் 85 சதவீதம் அழிக்கப்பட்டுள்ளதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# போர் முடிவுக்கு வர வேண்டும் ரஷ்யா தயாரா? தெரியவில்லை

## உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி

கீவ், மே 22

போர் முடிவுக்கு வர வேண்டும். அதற்கு ரஷ்யா தயாரா? என்பது தெரியவில்லை என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

இதுபற்றி ஜெலன்ஸ்கி குறிப்பிடும்போது, ரஷ்ய தரப்பு கொள்கைகளை பற்றி எனக்குத் தெரியாது. ட்ரம்புடனான எங்களுடைய பேச்சுக்களின் வழியே நான் புரிந்து கொண்ட விடயம் என்னவென்றால், ரஷ்ய தரப்பு எங்களுக்கு குறிப்பு ஒன்றை அனுப்ப விரும்புகிறது எனத் தெரிகிறது.

போர் நிறுத்தம் மட்டுமின்றி அவர்கள் வேறு சில கொள்கைகளையும் விரும்புகிறார்கள். போர் நிறுத்தத்துக்கு ஒவ்வொருவரும் அதிக ஆர்வத்துடன் உள்ளனர். நிறைய இழப்புகள் ஏற்பட்டு விட்டன. உண்மையில் போர் முடிவுக்கு வர வேண்டும் என நான் விரும்புகிறேன்.


அதற்கு ரஷ்யா தயாராக உள்ளதா? என எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. நாங்கள்



அவர்களை நம்பத் தயாராக இல்லை. முதல் நடவடிக்கையாக போர் நிறுத்தம் வேண்டும். உண்மையில் போரை நிறுத்தத் தயாராக இருக்கிறார்கள் என அவர்கள் காட்ட வேண்டும். அதன் பின்னரே கைதிகள் பரிமாற்றம் உள்ளிட்ட மற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்- என்றார். (எ)

# "உங்களின் நிறைவேறா கனவுகளை நிறைவேற்றுவதே எனது தீர்மானம்"

புதுடில்லி, மே 22



"அப்பா, உங்கள் நினைவுகள் என்னை ஒவ்வொரு அடியிலும் வழிநடத்துகிறது. உங்களின் நிறைவேறா கனவுகளை நிறைவேற்றுவதே எனது தீர்மானம். அவற்றை நிச்சயமாக நிறைவேற்றுவேன்"- என்று ராஜீவ் காந்தி நினைவு தினத்தை ஒட்டி ராகுல் காந்தி தனது எக்ஸ் பக்கத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

கடந்த 1991ஆம் ஆண்டு மே 21ஆம் திகதி சென்னைக்கு அருகில் உள்ள சிறிபெரும்புதூரில் நடந்த மனித வெடிகுண்டு தாக்குதலில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி உயிரிழந்தார். இந்த நிலையில் நேற்று அவரது 34ஆவது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனையொட்டி புதுடில்லியில் உள்ள வீர் பூமியில் இருக்கும் ராஜீவ் காந்தி நினைவிடத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் பாராளுமன்ற குழுத் தலைவர் ராகுல் காந்தி எம். பி. ஆகியோர் நேற்றுக் காலை நேரில் சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணி வெற்றி

புதுடில்லி, மே 22

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் சி.எஸ்.கே. அணியை ராஜஸ்தான் அணி வீழ்த்தியது.

ஐ.பி.எல். ரி - 20 கிரிக்கெட் தொடரின் 62ஆவது ஆட்டம் டில்லி அருண் ஜேட்லி மைதானத்தில் நடைபெற்றது. இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய சி.எஸ்.கே. அணியின் ஆயுஷ் மாத்ரே - டெவான் கொன்வே இருவரும் இன்னிங்ஸை தொடங்கினர். ஆயுஷ் மாத்ரே 20 பந்துகளில் 43 ஓட்டங்கள் விளாசி அசத்தினார். கொன்வே 10 ஓட்டங்களில் வெளியேறினார். ரவிச்சந்திரன் அஸ்வின் 13, ஜடேஜா 1, ப்ரெவிஸ் 42, டுபே 39, டோனி 16 என 20 ஓவர்களில் 187 ஓட்டங்கள் எடுத்தது சி.எஸ்.கே.

188 ஓட்டங்கள் என்ற இலக்குடன் இறங்கிய ராஜஸ்தான் அணிக்கு ஜெய்ஸ்வால்- சூர்யவன்ஷி இருவரும் ஆரம்பம் கொடுத்தனர். இதில் சூர்யவன்ஷி 57 ஓட்டங்களும் ஜெய்ஸ்வால் 36 ஓட்டங்களும் குவித்தனர். சஞ்சு சாம்சன் 41, ரியான் பராக் 3, துருவ் ஜூரேல் 31, ஹெட்




மயர் 12 ஓட்டங்கள் எடுக்க 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணி வெற்றி பெற்றது. இந்த சீசனில் ராஜஸ்தான் அணிக்கு இது கடைசி ஆட்டமாகும். இந்த வெற்றியுடன் ராஜஸ்தான் அணி இந்த சீசனை நிறைவு செய்துள்ளது.

(எ)

## மைதானத்தில் வாக்குவாதம்

# அபிஷேக் சர்மாவுக்கு 25 சதவீதம் அபராதம்



லக்னோ, மே 22

ஹைதராபாத் அணி வீரர் அபிஷேக் சர்மாவுக்கு 25 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

லக்னோ அணியின் பந்து வீச்சாளர் திக்வேஷும் ஹைதராபாத் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் அபிஷேக் சர்மாவும் மைதானத்தில் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற 61ஆவது லீக் ஆட்டத்தில் லக்னோ - ஹைதராபாத் அணிகள் மோதின. இதில் ஹைதராபாத் அணி அபார வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில் தோல்வியடைந்ததன் மூலம் பிளேஒவ் சுற்றுக்கு செல்லும் வாய்ப்பை லக்னோ அணி இழந்தது.

இந்த ஆட்டத்தில் ஹைதராபாத் அணியின் தொடக்க வீரர் அபிஷேக் சர்மா அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 20 பந்துகளில் 59 ஓட்டங்கள் குவித்தார். அவர் 7.3 ஓவரில் திக்வேஷ் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார்.

அபிஷேக் ஆட்டமிழந்ததை திக்வேஷ் தனது வழக்கமான பாணியில் கொண்டாடினார். அபிஷேக்கை நோக்கி கையசைத்தவாறு விக்கெட் எடுத்ததை திக்வேஷ் கொண்டாடினார். இதனால் ஆத்திரமடைந்த அபிஷேக் மைதானத்திலேயே திக்வேஷுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். மேலும், தலைமுடியை இழுப்பதுபோன்றும் செய்கை காட்டினார். இந்தச் சம்பவத்தால் மைதானத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் திக்வேசுக்கு ஒரு போட்டியில் விளையாட தடைவிதிக்கப்பட்டது.

மறுபுறம் அபிஷேக் சர்மாவுக்கு ஒரு தகுதி இழப்பு புள்ளியும் போட்டிக் கட்டணத்தில் இருந்து 25 சதவீதம் அபராதமாகவும் விதித்து ஐ. பி. எல். நிர்வாகம் தண்டனை வழங்கியுள்ளது. (எ)

# மும்பை அணியில் அசலங்க

மும்பை, மே 22

ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணி இங்கிலாந்தின் ஜானி பேர்ஸ்டோ, ரிச்சர்ட் க்ளீசன், இலங்கையின் சரித் அசலங்க ஆகியோரை ஒப்பந்தம் செய்துள்ளது.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வரும் இங்கிலாந்தின் வில் ஜேக்ஸ், தென் ஆபிரிக்காவின் ரியான் ரிக்கெல்டன், கார்பின் போஷ் ஆகியோர் எதிர்வரும் 26ஆம் திகதி பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிராக நடைபெறும் கடைசி லீக் ஆட்டத்துடன் தாயகம் திரும்புகின்றனர்.

வில் ஜேக்ஸ், மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் பங்கேற்கவுள்ளார். இதேவேளையில் ரியான் ரிக்கெல்டன், கார்பின் போஷ் ஆகியோர் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தயாராகுவதற்காக தென்னாபிரிக்க அணியுடன் இணையவுள்ளனர்.

இதனால் இந்த 3 வீரர்களுக்கு பதிலாக மும்பை அணி இங்கிலாந்தைச் சேர்ந்த ஜானி பேர்ஸ்டோ, ரிச்சர்ட் க்ளீசன், இலங்கையின் சரித் அசலங்க ஆகியோரை ஒப்பந்தம் செய்துள்ளது.

ஜானி பேர்ஸ்டோ இலங்கை மதிப்பில் 17 கோடி ரூபாய்க்கும் ரிச்சர்ட் க்ளீசன் 4 கோடி ரூபாய்க்கும், சரித் அசலங்க 2. 6 கோடி ரூபாய்க்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். (எ)

# அகமதாபாத் மைதானத்தில் ஐ. பி. எல். இறுதிப் போட்டி

மும்பை, மே 22

ஐ.பி.எல். இறுதிப் போட்டி அகமதாபாத்திலும் பிளேஒவ் சுற்றின் இரு ஆட்டங்கள் முலான்பூரிலும் நடைபெறும் என பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் இடையே நிலவிய போர்ப் பதற்றம் காரணமாக கடந்த 8ஆம் திகதி ஐ.பி.எல். தொடர் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. இதன் பின்னர் 11ஆம் திகதி போர் நிறுத்தம் ஏற்பட்ட நிலையில் ஐ.பி.எல். போட்டிகளை மீண்டும் நடத்துவதற்கான ஏற்பாடுகளை பி.சி.சி.ஐ. மேற்கொண்டது. இதன்படி திருத்தியமைக்கப்பட்ட போட்டி அட்டவணையை வெளியிட்டது. இதில், இறுதிப் போட்டி மற்றும் பிளேஒவ் சுற்றுப் போட்டிகள் நடைபெறும் இடங்கள் மட்டும் அறிவிக்கப்படாமல் இருந்தது.

கடந்த 17ஆம் திகதி முதல் மீண்டும் போட்டிகள் நடைபெற்று வரும் நிலையில் தற்போது லீக் ஆட்டங்கள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. குஜராத் டைட்டன்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு, பஞ்சாப் கிங்ஸ் ஆகிய 3 அணிகள் பிளேஒவ் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ள நிலையில் கடைசி ஓர் இடத்துக்கு மும்பை இந்தியன்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதவுள்ளன.

இந்த நிலையில் இறுதிப் போட்டி மற்றும் பிளேஒவ் சுற்று ஆட்டங்கள் நடைபெறும் இடங்களை பி.சி.சி.ஐ. அறிவித்தது. இதன்படி ஜூன் 3ஆம் திகதி இறுதிப் போட்டி அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெறுகிறது. இதே மைதானத்தில் ஜூன் முதலாம் திகதி தகுதி சுற்று 2 ஆட்டமும் நடைபெறும். முன்னதாக தகுதி சுற்று முதல் ஆட்டம் எதிர்வரும் 29ஆம் திகதியும், வெளியேற்றல் ஆட்டம் 30ஆம் திகதியும் முலான்பூரில் நடைபெறுகிறது.

# ரிஷப்புக்கு 65 கோடி செலவிட்டது தவறு

## ரொம் மூடி விமர்சனம்

லக்னோ, மே 22

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியிடம் தங்கள் சொந்த மண்ணில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணி தோல்வி அடைந்து பிளேஒவ் வாய்ப்பை இழந்தது. இந்த நிலையில், அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ரொம் மூடி சர்ச்சைகளை ஏற்படுத்தும் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ரிஷப் பண்டை லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணி இலங்கை மதிப்பில் சுமார் 65 கோடி ரூபாய்க்கு ஏலம் எடுத்தது. மேலும், நிக்கோலஸ் பூரனை 63 கோடி ரூபாய்க்குத் தக்க வைத்தது. இந்த இரண்டு மிகப் பெரிய செலவீனங்களால் லக்னோ அணி நல்ல பந்து வீச்சாளர்களை எடுக்க முடியவில்லை. சன்ரைசர்ஸ் அணி 205 ஓட்டங்கள் இலக்கை வெற்றிகரமாக விரட்டி லக்னோவை வெளியேற்றியது. அபிஷேக் சர்மா லக்னோவின் பந்து வீச்சை நாசம் செய்தார். குறிப்பாக, நன்றாக பந்து வீசும் ரவி பிஷ்னாய்யின் ஒரே ஓவரில் 26 ஓட்டங்களை 4 சிக்ஸர்களுடன் விளாசித் தள்ளினார்.

தன் இஷ்டத்திற்கு சிக்ஸர்களையும் பௌண்ட்ரிகளையும் விளாசி 20 பந்துகளில் 6 சிக்ஸர்கள் 4 பௌண்ட்ரிகளுடன் 59 ஓட்டங்களை அபிஷேக் சர்மா விளாசித் தள்ளினார். இஷான் கிஷன், கமிந்து மெண்டிஸ், ஹென்றிக் கிளாசன் ஆகியோரும் லக்னோ பந்து வீச்சை மைதானம் முழுக்கச் சிதறடிக்க வெற்றி சுலபமானது. லக்னோவின் இதயத்தில் இடி விழுந்தது. பிளேஒவ் வாய்ப்பு பறிபோனது.

ரிஷப் பண்டுக்கு இது ஒரு மோசமான ஐ.பி.எல். தொடராக அமைந்தது. லக்னோ உரிமையாளர் வெளிப்படையாகவே ரிஷப் பண்ட் ஆட்டமிழந்தபோது தன் அதிருப்தியை தெரிவிக்குமாறு செய்கை செய்தார்.

இந்த நிலையில், பந்து வீச்சு அணி சரியாக இல்லாததால் லக்னோ வெளியேறியது என்று கூறிய ரொம் மூடி, “ரிஷப் பண்ட் மற்றும் நிக்கோலஸ் பூரன் மீது செலவிட்ட மிகப் பெரிய தொகையால் நல்ல பந்து வீச்சு அணியை கட்டமைக்க முடியாமல் போனது. ஏலத்தில் மற்ற பந்து வீச்சாளர்களை எடுக்க போதிய நிதி ஆதாரம் இல்லாமல் போய்விட்டது”- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)





# ரேபிள் ரெனிஸ் சம்பியன்ஷிப்:

## இந்தியர்கள் படுதோல்வி



டோஹா, மே 22

உலக ரேபிள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் டோஹாவில் நடைபெற்று வருகிறது. இதில் இந்தியர்கள் படுதோல்வி அடைந்துள்ளனர்.

இதில், ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் 48ஆவது இடத்தில் உள்ள இந்தியாவின் மானவ் தாக்கர், உலகத் தரவரிசையில் 4ஆவது இடத்தில் உள்ள ஜப்பானின் ஹரிமோட்டோ டொமோகாஸ் உடன் மோதினார். இதில் கடுமையாக போராடிய மானவ் தாக்கர் 11-13, 3-11, 11-9, 6-11, 11-9, 3-11 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்தார்.

இதேவேளை, மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் 46ஆவது இடத்தில் உள்ள இந்தியாவின் மணிகா பத்ரா, 130ஆவது இடத்தில் உள்ள தென் கொரிய வீராங்கனை பார்க் கஹியோனுடன் மோதினார். இதில், மணிகா பத்ரா 8-11, 7-11, 5-11, 8-11 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறினார். மற்றொரு இந்திய வீராங்கனையான தியா சித்தலே 3-7, 7-11, 6-11, 11-6, 5-11 என்ற செற் கணக்கில் சீன வீராங்கனை சென் ஐ ஷிங்கிடம் தோல்வியடைந்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதமர் ஹரிணி அமரசூரியவினால் அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில், இவ் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் எழுந்திருக்கும் முரண்பாடுகள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணி முதல் பி.ப 1.00 மணிவரை பாராளுமன்றத்தில் தனது தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

"காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வடக்கு மாகாணத்தின் காணிகளை நிர்ணயம் செய்வதற்காக இலக்கம் 2430 மற்றும் 28.05.2025 திகதியிட்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அந்த மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் காணி நிர்ணயம் தொடர்பாக எழுந்துள்ள பிணக்குகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக நாளை வெள்ளிக்கிழமை மு.ப 11.00 - பி.ப 1.00 மணிவரை பாராளுமன்றத்தின் குழு அறை 01 இல் எனது தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு உங்களது பங்கேற்பினை மிகவும் கௌரவத்துடன் எதிர்பார்க்கின்றேன்" என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## யாழ்ப்பாணத்தில்...

வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை அவர் உயிரிழந்துள்ளார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

இதய உறை அறைக்குள் இரத்தக் கசிவு ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ-05)

## தமிழ் இன...

பிரம்டன் நகர சபைக்கு உட்பட்ட பகுதியொன்றில் தமிழின அழிப்பு தொடர்பாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபி தொடர்பில் ஊடகம் ஒன்றில் கருத்து வெளியிட்ட அவர்,

இலங்கையில் தமிழ் இன அழிப்பு இடம்பெற்றதாக கூறும் குற்றச்சாட்டுகளை அரசாங்கம் முற்றாக நிராகரிக்கிறது. கனடாவின் பிரம்டன் நகர சபையின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டுள்ள குறித்த நினைவுத் தூபிக்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துகிறோம். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

இறுதி யுத்தத்தில் நந்திக்கடல் பகுதியில் கைக் குழந்தைகளுடன் வந்தவர்களைக்கூட எமது இராணு வத்தினர்தான் காப்பாற்றியிருந்தனர். இன அழிப்பு என்பது தமிழர்களை இராணுவத்தினர் தேடி தேடி கொலை செய்திருக்க வேண்டும். அவ்வாறு இடம் பெற்றதா? யுத்த காலத்தில் சரணடைந்த அல்லது இராணுவத்தின் கட்டுப்பாட் டுக்குள் வந்தவர்களை இராணுவத்தி னர்தான் காப்பாற்றியிருந்தனர்-என்றார்.

இதேவேளை, தமிழ் இன அழிப்பு உள்ளிட்ட பதங்களை பயன்படுத்தி கோஷங்கள் மற்றும் பதாதைகள் வைக்கப்படுகின்றன. முள்ளிவாய்க்கால் பகுதியில் இம்முறையும் இந்தப் பதங்கள் பயன்படுத்தப்பட்டன. இதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எதுவும் ஏன் எடுக்கப்படுவதில்லை என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்த அவர்-

இன அழிப்பு போன்ற கருத்துகள் பகிரப்படுவதற்கு எதிராக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் எச்சரிக்கை விடுத்தார். (அ)

## வடக்கில்...

செலுத்தவேண்டும். அலுவலகத்துக்கு வரும் பொதுமக்களை காக்க வைக்காதீர்கள் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநருக்கும், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கும் இடையிலான மாதாந்த கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்றையதினம் புதன்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் ஆளுநர்களுடனான சந்திப்பின்போது மாகாணங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை இந்த ஆண்டுக்குள் செலவு செய்யவேண்டும் என அறிவுறுத்தியதாகவும், அதற்கு அமைவாக வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை உரிய திட்டங்களுக்கு உரியவாறு செலவு செய்து முடிக்குமாறும் அறிவுறுத்தினார்.

திட்டங்களை திணைக்களத் தலைவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு தொடர் கண்காணிப்பை முன்னெடுப்பதன் ஊடாகவே விரைவாக செயற்படுத்தி முடிக்க முடியும் எனக் குறிப்பிட்ட ஆளுநர், பின்தங்கிய கிராமங்களிலிருந்து மக்களின் கோரிக்கைகளை உள்வாங்கியே திட்டங்களை அடையாளப்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியை உரியவாறு செலவு செய்வதன் ஊடாக அடுத்த ஆண்டு அதிகளவான நிதியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இருப்பதையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

மேலும், திணைக்களங்களுக்கு இடையிலான கடிதப் பரிமாற்றங்கள் மின்னஞ்சல் ஊடாக முன்னெடுக்கப்பட்டு பணிகள் விரைவுபடுத்தப்படவேண்டும் என அறிவுறுத்திய ஆளுநர், திணைக்களத் தலைவர்கள் இதனைப் பின்பற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதன் பின்னர் பிரதிப் பிரதம செயலாளரால் ஒவ்வோர் அமைச்சுக்கள், அதன் கீழான திணைக்களங்களில் திட்டங்களின் முன்னேற்றங்கள் விரிவாக தெரியப்படுத்தப்பட்டன.

அதில் ஒவ்வோர் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் முன்னெடுக்கும் திட்டங்களில் உள்ள இடர்கள் தொடர்பில் ஆராயப்பட்டு மாற்று ஒழுங்குகள் பரிந்துரைக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தின் 5 அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அதன் கீழான அனைத்துத் திணைக்களங்களின் தலைவர்களும் கலந்துகொண்டனர். (அ)

## பூவரசங்குளம்...

அதிகாரிகள் குறித்த பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஐந்து இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற முற்பட்டபோது அவரைக் கைது செய்தனர்.

காணி விடயம் ஒன்று தொடர்பாக குறித்த இலஞ்சம் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட பொறுப்பதிகாரி மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அவர் இன்று வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-10)

## முல்லைத்தீவில்...

உள்ளானதாக கொக்கிளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த சிறுமி முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் தொடர்புடைய பட்டா சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கிளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## மக்கள் மீண்டும்...

கொழும்பில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

அமைச்சர் சந்திரசேகர், இலங்கையின் மீனவர் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்னைகள், எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் குறிப்பாக வடக்கு மக்களின் வாழ்வாதாரப் பிரச்னைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடினார்.

அபிவிருத்தியில் பின்தங்கிய சமூகமாக வாழும் வடக்கு மக்களின் நிலை குறித்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், 30 வருட கால யுத்தத்துக்குப் பின்னரும் வடக்கு மக்கள் இன்னும் முறையான கவனம் செலுத்தப்படாமல் வாழ்ந்துகொண்டிருப்பதாக வலியுறுத்தினார்.

கடந்த கால அரசுகள் தமிழ் மக்களைப் பெரும்பாலும் புறக்கணித்ததாகவும், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்தப் பாகுபாடுமின்றி அந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம் படுத்த பாரிய அபிவிருத்தித் திட்டங் களை அமுல்படுத்த உறுதிபூண்டுள்ளதா கவும் அவர் தெரிவித்தார். ஊழல், மோசடி மற்றும் இனவாதம் அற்ற ஒரு நாட்டை உருவாக்குவதே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் என அமைச்சர் மீண்டும் வலியுறுத்தினார்.

வடக்கில் உள்ள பல சமூகங்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வதாகவும், 40 வீதம் பேர் இன்னும் தற்காலிக கொட்டில்களில் வசிப்பதாகவும் அமைச்சர் விளக்கினார். பெற்றோரை இழந்த பிள்ளைகள், விதவைகள் மற்றும் பல முதியோர் ஆதரவற்ற நிலையில் இருப்பதாகவும் அவர் வலியுறுத்தினார். மேலும், 60 வீத மக்கள் கடன்பட்டு வாழ்வதாகவும், கடனைத் திருப்பிச் செலுத்த பெரும் சிரமங்களை அனுபவிப்பதாகவும், வன்னிப் பிரதேசத்தில் பெண்கள் தற்கொலை செய்துகொள்வது அதிகரிப்பதற்கு இதுவே முக்கிய காரணம் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கடற்றொழிலில் ஈடுபடும் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் அமைச்சர் சந்திரசேகர் கலந்துரையாடினார். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு தீவிரமாகச் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். வடக்கு மற்றும் தெற்கு மீனவர்கள் எந்தப் பாகுபாடும் இல்லாமல் தமது தொழிலில் ஈடுபட்ட ஒரு காலம் இருந்ததாகவும், ஆனால் பாகுபாடு அரசியல் இலங்கையில் இனவாதத்தை வளர்த்து தேசிய ஒற்றுமையைச் சீர்குலைத்ததாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

நாட்டில் நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்ப அரசாங்கம் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் வலியுறுத்தினார். எந்த வடிவத்திலும் இனவாதத்துக்கு இனி இடமளிக்கப்பட மாட்டாது என அவர் திட்டவட்டமாக அறிவித்தார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் குழப்ப மீண்டும் இனவாதப் பிரிவுகளைத் தூண்டிவிட உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சில தீய சக்திகள் முயற்சிப்பதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

மக்களை மீண்டும் இன ரீதியாகப் பிளவுபடுத்தும் எந்தவொரு செயற்பாடுகளுக்கும் இடமளிக்க வேண்டாம் என கனேடிய தூதுவரிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கனேடிய தூதுவர் எரிக் வோல்ஷ், இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு கனடாவின் முழு ஆதரவை வழங்குவதாகக் கூறினார். ஊழல் மற்றும் மோசடிகளுக்கு எதிராகப் போராடுவதற்கு தேசிய மக்கள் சக்தி பெற்ற வலுவான மக்கள் ஆணையை அவர் குறிப்பாகப் பாராட்டினார். இந்த முயற்சிகளுக்கு கனடாவின் தொடர்ச்சியான ஆதரவை வெளிப்படுத்தினார். புதிய அரசாங்கத்தை சர்வதேச சமூகம் வரவேற்றுள்ளதாக தூதுவர் குறிப்பிட்டார். (அ)

## முள்ளிவாய்க்கால்...

சர்வதேச மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிறிலங்கா இராணுவத்தின் திட்டமிட்ட சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் கையொப்பமிடப்பட்ட இந்த மனுவினை பாதிக்கப்பட்டவர்களான ஆரங்கன் ஜெயக்குமார், விஷ்வா ரமேஸ், அபினாஷ் திலீபன், ஜெயகீசன் விஜயகுமார், கிசோத்தன் காந்தன், ருத்திகா சிவஞானம் ஆகிய செயற்பாட்டாளர்கள் கையளித்திருந்தனர்.

மனுவின் முக்கியக் கோரிக்கைகள் வருமாறு:

1. இலங்கையில் நடைபெற்ற தமிழினப்படுகொலையை பிரித்தானியா உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்க வேண்டும்.

2. இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பிரேரிக்க வேண்டும்.

3. தமிழர்களுக்கு எதிரான யுத்த குற்றம் செய்த ஏனையவர்களுக்கு பயணத் தடை மற்றும் சொத்துத் தடைகள் விதிக்க வேண்டும்.

4. போர்க் குற்றவாளிகள் தூதுவர்கள் ஆகுவதற்கும் அதிகாரபூர்வ பதவிகள் வகிப்பதற்கும் தடையிடவேண்டும்.

5. சார்பற்ற சர்வதேச விசாரணையை அமைக்க பிரித்தானியா முன்னெடுப்பாக செயல்படவேண்டும்.

6. தமிழினப்படுகொலையை விசாரிக்கும் சர்வதேச நீதிமன்றம் ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும்- என கோரப்பட்டுள்ளது. (அ)

## இனப்படுகொலை...

மேற்குறித்த நினைவுத் தூபி அமைப்புக்கு நன்றி தெரிவித்து கனேடியப் பிரதமர் மார்க் ஹானிக்கும், பிரம்டன் நகர மேஜர் பற்றிக் பிரவுணுக்கும் கடந்த 19ஆம் திகதி மின்னஞ்சலில் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களின் பிரதியே நேற்று கனேடியத் தூதுவரிடம் சிறீதரன் எம்.பியால் நேரில் கையளிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இலங்கைத்தீவின் அளவிற் சிறிய தேசிய இனமாக அடையாளப்படுத்தப்படும் தமிழ்த்தேசிய இனம்மீது, இலங்கை அரசால் வலிந்து மேற்கொள்ளப்பட்ட மனிதப் பேரவலத்தை "இனப்படுகொலை" என்று ஏற்றுக்கொண்ட முதலாவது நாடான கனடாவின் பிரம்டன் நகரில், தமிழினப் படுகொலை நினைவுத்தூபி நிறுவப்பட்டு, வலிசுமந்த மாதமான மே மாதத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளமை, பாதிக்கப்பட்ட எமது மக்களின் மனக் காயங்களுக்கு மருந்தாய் அமைந்துள்ளதை நன்றியோடு பதிவுசெய்கிறேன்.

ஈழத்தமிழர்கள்மீது நிகழ்த்தப்பட்ட போரின் அறமீறல்கள் குறித்தும், போர் முடிவுற்றதன் பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் எமது மக்களின் பாரம்பரிய வாழ்விடங்கள்மீதும், கூட்டுப் பண்பாடுகள்மீதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கட்டமைக்கப்பட்ட இன அழிப்புச் செயற்பாடுகள் தொடர்பிலும் கரிசனையோடிருக்கும் கனேடிய அரசினால், ஈழத் தமிழினம் சார்ந்து சமகாலத்தில் முன்னகர்த்தப்படும் காத்திரமான செயல்களும், அறிவிப்புகளும் சர்வதேச அரங்கிலும், தமிழ் மக்கள் மனங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை உணர முடிகிறது. (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பாதாள உலகத்துடன் எமக்கு எந்த தொடர்பும் கிடையாது!

## சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

கொழும்பு, மே. 22

**ஐக்கிய மக்கள் சக்திக்கு பாதாள உலகத்துடன் எந்த தொடர்பும் கிடையாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தை கூறினார்.**

அவர் மேலு தெரிவிக்கையில்-

மின்சாரக் கட்டணத்தை 33 வீதத்தால் குறைப்பதாக அரசாங்கம் வாக்குறுதியளித்தது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் இதனைத் தெரிவித்தார்.அவ்வாறு உறுதியளித்த அரசாங்கம் இப்போது மின்சார கட்டணத்தை 18 வீதத்தால் அதிகரிக்கப் போகிறது.

சாதாரண மக்களுக்கு நிவாரணத்தை வழங்க வேண்டும். பொய் சொல்லாமல் உண்மையைப் பேச வேண்டும்.

நாட்டில் கடந்த காலங்களில், சிவில் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த 34 ஆயிரம் பேருக்கு அற்ப ஊதியத்தை வழங்கி வீட்டிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த அரசாங்கமும் இத்தகைய கொள்கையையே பின்பற்றி வருகிறது.



ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த தலைவர்கள் பாதாள உலகத்துடன் தொடர்புபட்டுள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் குற்றம் சாட்டினார். பாதாள உலகத்துடன் தொடர்புடைய ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த தலைவர்கள் யார் என்பதை நிரூபிக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

வாய் இருப்பதற்காக பொய் சொல்லாமல் மக்களை ஏமாற்றாமல் உண்மையைச் சொல்லுங்கள். ஐக்கிய மக்கள் சக்திக்கு பாதாள உலகத்துடன் எந்த தொடர்பும் இல்லை - என்றார். (அ)

# தேசிய பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தவேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, மே. 22

நாட்டில் இடம்பெறும் துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் பொதுமக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் தொடர்ச்சியாக துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் இடம்பெறுகின்றன. நாளை அவ்வாறானதொரு சம்பவம் நடைபெறாது என அரசாங்கத்தால் உறுதியாக கூற முடியுமா?

பட்டப்பகலில் கூரிய ஆயுதத்தால் பொதுமக்கள் முன்னிலையில் நபர் ஒருவர் வெட்டப்படுகிறார். பொது வெளியில் தலைக்கு துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டு தப்பிச் செல்கிறார்கள். அவ்வாறு தப்பிச்செல்லும்போது அந்த நபர்கள் கைது செய்யப்பட்டதாக நாம் அறியவில்லை.

தேசிய பாதுகாப்பு குறித்து வாய்ப்பேச்சில் மாத்திரம் இருந்தால் போதாது. திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.நாம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள். ஆளும் தரப்பினரை மாத்திரம் மக்கள் தெரிவு செய்யவில்லை.

கொலைச் சம்பவங்களால் எமது உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. சபாநாயகர் இது குறித்து அவதானம் செலுத்த வேண்டும்.-என்றார். (அ)

# 769 வழித்தட பஸ் சேவையினர் நேற்று மறியல் போராட்டத்தில்!



யாழ்ப்பாணம், மே. 22

யாழ்ப்பாணத்தில், 769 வழித்தட சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் நேற்று வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த காலங்களில், வசாவிளான் சந்தியில் இருந்து, பருத்தித்துறை-பொன்னாலை வீதி வரையிலான பலாலி வீதி, உயர் பாதுகாப்பு வலயத்தினுள் காணப்பட்டமையால், யாழ்ப்பாண நகர் பகுதியில் இருந்து புறப்படும் 764 வழித்தட பஸ்கள், வசாவிளான் சந்தியுடன் தமது சேவைகளை மட்டுப்படுத்தி இருந்தன.

அதனால், மயிலிட்டி பகுதியில் வசிக்கும் மக்களின் நலன்கருதி, யாழ்ப்பாண நகரில் இருந்து புறப்படும் 769 வழித்தட பஸ்கள் மயிலிட்டி வரை சேவையில் ஈடுபட்டன.

தற்போது உயர் பாதுகாப்பு வலயத்தின் ஊடாக செல்லும் பலாலி வீதி திறக்கப்பட்டுள்ளமையால், யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் 764 வழித்தட பஸ்கள், யாழ்ப்பாண நகரில் இருந்து புறப்பட்டு, பலாலி வீதியூடாக, பருத்தித்துறை - பொன்னாலை வீதியை அடைந்து, அதனூடாக காங்கேசன்துறை ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள பஸ் நிலையம் வரை, சேவையில் ஈடுபடுகின்றன.

இந்த நிலையில், 769 வழித்தட சேவையில் ஈடு பட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள், தாம் இதுவரை காலமும் மயிலிட்டியில் இருந்து சேவையை ஆரம்பித்தது போன்று ஆரம்பிக்கவும், யாழ்ப்பாணத் தில் இருந்து புறப்பட்டு, காங்கேசன்துறை வீதி வழி யாக, மயிலிட்டி வரை சேவையில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் எனக் கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 30 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் தனியார் பஸ் சேவை வழித்தடம் தொடர்பான கூட்டம் இடம்பெற்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட நிலையில், ஆளுநர் போராட்ட இடத்திற்கு வரவேண்டும் எனக் கோரி, சாரதிகள் நடத்துநர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, பொலிஸார் தலையிட்டு வழமை போன்று சேவையில் ஈடுபடுமாறு கூறியதை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (அ)

# ரமித் ரம்புக்வெல விளக்கமறியலில்!

கொழும்பு, மே. 22

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின் மகன் ரமித் ரம்புக்வெலவை எதிர்வரும் 03ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஊழல் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய வழக்கில் வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்று இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அவர் சமூகமளித்திருந்த நிலையில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார். (அ)

# ஊழியர் சேமலாப நிதியத்தின் சேவைகள் மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு, மே. 22

ஊழியர் சேமலாப நிதியத்தின் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவது குறித்து தொழிலாளர் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி, நாடு முழுவதும் அமைந்துள்ள தொழிலாளர் அலுவலகங்களில் ஊழியர் சேமலாப நிதியத்தின் நன்மைகளை பெறுவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது நேற்று நண்பகல் 12.00 மணி முதல் வழக்கம் போல் மேற்கொள்ளப்படும் என்று அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஊழியர் சேமலாப நிதியத்தின் கணினித் தரவுத்தள அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட அவசர மற்றும் அத்தியாவசிய பராமரிப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதால், சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான சேவைகளை வழங்குவது நேற்று முதல் 23 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் ஊழியர் சேமலாப நிதியத்தின் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

# நல்லூரில் திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தை மூடுக!

## மாநகர ஆணையாளருக்கு மகஜர்



படம் : ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணம், மே. 22

நல்லூர் கந்தசுவாமி கோயில் அருகே திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தை மூட வலியுறுத்தி ஆலய பக்தர்களிடம் சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்களடங்கிய மகஜர் யாழ்.மாநகர சபை ஆணையாளரிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

ஆலய பக்தர் ஒருவரின் தன்னார்வ முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கையில் 450 இற்கும் மேற்பட்டவர்கள் தமது கையொப்பங்களை பதிவு செய்தனர்.

குறித்த கையொப்பங்கள் அடங்கிய மகஜர் யாழ். மாநகர சபை அலுவலகத்தில் வைத்து மாநகர சபை ஆணையாளர் கிருஷ்ணேந்திரனிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது சிவகுரு ஆதீனத்தின் தவத்திரு வேலன் சுவாமிகள் உள்ளிட்ட சைவ சமய ஆர்வலர்கள் பங்கேற்றனர்.

குறித்த மகஜரின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர், நல்லூர் பிரதேச செயலாளர், இந்து கலாசார திணைக்கள பணிப்பாளர் ஆகியோருக்கும் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, மே. 22

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றித்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

நோயாளிகளின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும், சுகாதாரத்தின் தரத்தை குறைக்கும் பட்டங்களை நீக்கவேண்டும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக அங்கீகரிக்கப்பட்ட பட்டம் பெற்றவர்களை அரச துறையில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களின் மத்தியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றித்தின் தலைவர்-

இலவச கல்வியை தனியார்மயப்படுத்தும் முயற்சியை அரசாங்கம் மேற்கொள்கின்றது.

தனியார் கல்வி நிலையங்களில் பெறப்பட்ட பட்டங்களுக்கு ஏற்ப அரச தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ளத் தகுந்த பாதுகாப்பை அரசாங்கம் வழங்க விளைகின்றது.

இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கத்துக்கு கல்வியை தனியார் மயப்படுத்தும் நோக்கம் உள்ளது-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண[illegible] நிறுவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உ[illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org